# தமிழரசு பொதுச்செயலாளராக மீண்டும் அமிர்தலிங்கம் தெரிவு

Riegstered as a News paper in Ceylon விலைதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 59
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 28 முஹறம் 22 வியாழக்கிழமை 10-4-69

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

★ மாவட்டசபை வாக்குறுதி ★ திருமலை பல்கலைக்கழகம் ★ தமிழ்மொழி சட்டவிதி அமுல் ★ தமிழ் அரசாங்க ஊழியர்

# ஏமாற்றம்: அதனால் இனி நிபந்தனை ஒத்துழைப்புமில்லை

## தமிழரசார் தீர்மானம்

— நமது காரியாலய நிருபர் எஸ். திருச்செல்வம் —

யாழ்ப்பாணம், வியாழன்

**தேசிய அரசாங்கத்துக்கு அளித்துவந்த ஆதரவை தமிழரசுக்கட்சிவிலக்கி சுதந்திரமாக இயங்கும் ஒரு எதிர்க்கட்சியாக செயல்படுவதென தமிழரசுக்கட்சி மகாநாட்டின் அரசியல் ஆலோசனைக் கூட்டத்தில் நேற்றுக்காலை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.**

கடந்தசில மாதங்களாக அரசாங்கத்துக்கு அளித்துவந்த நிபந்தனையுடன் கூடிய ஆதரவையும் முற்றும் முழுதாக நீக்கிக்கொண்டு எதிர்க்கட்சியில் சுதந்திரமான ஒரு குழுவாக இயங்குவதென்றும் இத்தீர்மானம் தெரிவிக்கிறது.

சுதந்திரமாக எதிர்க்கட்சியில் இயங்கும்போது எதிர்க்கட்சிக் கொராடாவின்கீழ் தமிழரசுக்கட்சி செயல்படமாட்டாதென இத் தீர்மானத்தை விளக்கிப் பேசுகையில் தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

திரு, டட்லிசேனநாயகாவின் தலைமையில் இயங்கும் இன்றைய அரசாங்கத் ... வாக்குறுதியும், திருமலையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படுமென்ற உறுதிமொழி ... டத்தையும் ஏமாற்றத்தையும் அளிக்கக்கூடியவகையில் அமுல் நடத்தி வருவதா

தமிழரசுக்கட்சியின் 11-வது மாநில மாநாடு இவ் அனுபவத்தின் பின் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியிருக்கும் அரசியல் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஒரேவழி இந்நாட்டில் சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவதுதான் என்ற தனது அடிப்படைக் கொள்கையை மீண்டும் உறுதியோடு சமஷ்டி அமைப்பின் கீழ் அன்றிதமிழ்பேசும்மக்கள் சுதந்திரம் தான் மானம், சமத்துவம் இவற்றோடு வாழமுடியா தென்பதையும் பிரகடனப்படுத்துகின்றது

## வெளிநாட்டு இந்தியர்: பாரத பிரதம நீதிபதிகருத்து

புதுடில்லி, ஏப். 9

வெளிநாடுகளில் குடியேறிய இந்தியர்களை எவ்வாறு குடியமர்த்த முடியும் என்பதற்காக பிரஜாஉரிமை தேசியஉரிமைபற்றிய விதிகளை இந்திய மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று பிரதம நீதிபதி ஹிதயதுல்லா கூறினார்.

அவர்கள் மாறிய நிலைக அவர் வெளி நாடுகளில் உள்ள இந்தியர்கள் பற்றிய கருத்தரங்கை பிரதம நீதிபதி ஆரம்பித்துவைத்தார்.

வெளிநாட்டில் குடியேறிய இந்தியருக்கும் அங்கு சும்மா சென்றவருக்கும் இடையே நாம் வேறுபாடு காணலாகாது, நம்முடன் வாழவிரும்பினால் இந்தியன்

# பண்டிதரும், மாணிக்கராசாவும் உப தலைவர்கள்

யாழ்ப்பாணம், வியா.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவில், அரைமணிநேரம் நடந்த கடுமையான வாக்குவாதத்தின் பின்னர் பொதுச் செயலாளர் பதவிக்கு பெயர் பிரேரிக்கப்பட்ட பண்டிதர் கா. பொ. இரத்தினம் சிலர் செய்த சமரச முயற்சியின் பலனாக தமது பெயரை வாபஸ் பெற்றுக்கொண்டதாக தெரிகிறது. இதன் பின்னர் கட்சியின் தற்போதைய பொதுச்செயலாளரும், வட்டுக்கோட்டை எம பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் மீண்டும் பொதுச் செயலாளராக ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டார்.

திரு. அமிர்தலிங்கத்தின் பெயரை திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தன் பிரேரிக்க திரு, க. சின்னத்துரை அனுமதித்தார்

உபசெயலாளர்களாக திருமு. ஆலாலசுந்தரம், அல்ஹாஜ் மசூர் மௌலானா, திரு. ஜி. பி. வின்சென்ட், திரு. பாலசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

உபதலைவர்களாக பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. எஸ். எம் மாணிக்கராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தனாதிகாரியாக உடுவில் எம் பி. திரு, வி. தர்மலிங்கமும், உப தனாதிகாரிகளாக திருவாளர்கள் எஸ். ஜே வி. செல்வநாயகம், சி. எ ஸ். மார்ட்டின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (கா. நி.)

# 'ம. பொ. சி. சொற்பொழிவு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்'

யாழ்ப்பாணம், விய.

''இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 11 வது மாநில மாநாடு இத்தனை சிறப்பும் அமைதியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் கொண்டதாக இருப்பதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இம் மாநாட்டில் பங்குகொண்ட சகல மாவட்டங்களிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்களை வரவேற்று உபசரிப்பதில் நான பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். உடுவில் தொகுதியிலுள்ள தொண்டர்கள் குறிப்பாக உடுவில் கிராமசபைப் பகுதியில் வாழும் மக்கள் எவ்விதமான கட்சிப்பாகுபாடும் சமூகப் பாகுபாடு மின்றி இப்பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு செய்த சேவை தமிழினத்தின் தன்மானத்தை பாதுகாப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும்'' என்று நேற்று உடுவிலில்தமிழரசு மாநாட்டில் உடுவில் கி. ச. தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் நன்றி தெரிவித்து பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில்.

''மான்புமிகு ம. பொ. சி. அவர்கள் எமது இலக்கிய மாநாட்டில் பங்குகொண்டு ஆற்றிய சொற்பொழிவு ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் மத்தியிலே ஓர் புத்துணர்சியை ஏற்படுத்திஎமதுதாய்மொழி சிறப்பும் எமது பழங்கால நாகரீக வாழ்க்கையும் அன்னிய ஆதிக்க காலத்திலிருந்த தயக்கத்தையும் மாற்றி அமைக்க வழி கோலும் என நம்புகின்றேன் என்று கூறினார். கா. நி.

### புதிய பஸ்கள்

பருத்தித்துறை, செவ்.

புத்தாண்டைத் தொடர்ந்து பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதிக்கென பத்து பஸ் வண்டிகள் வரவிருப்பதாகவும், அவற்றுள் ஆறு புதிய பஸ் வண்டிகளாகயிருக்குமென்றும் தெரியவருகிறது. பருத்தித்துறை பஸ் பிரயாணிகள் சங்கத்தின் வேண்டுகோளே இதற்குக் காரணமெனத் தெரிகிறது.

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழா

# ஜூனின் 5-ம் திகதி யாழ். நகரில் அலங்கார வண்டிகள் பவனி

யாழ்ப்பாணம், புதன்

ஈழநாடு 10-வது வருட நிறைவு விழாவையொட்டி நடைபெறும் கோலாகல நிகழ்ச்சிகளில் அலங்கார ஊர்வலமும் ஒன்றாக இருக்கும். இதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பவனியில் கலந்துகொள்ள ஏராள நிறுவனங்களும், சனசமூக நிறுவனங்களும் ஆர்வம் காட்டியுள்ளன.

இந்த பவனியில் தமிழர் பெரும் வரலாற்றின் பல நிகழ்ச்சிகளை சித்தரிக்கும் அலங்காரவண்டிகள் கலந்து கொள்ளும்.

யாழ்ப்பாணத்திலுள்ள ... திய இசைகளுடன் செல்லவிருக்கும் இவ்ஊர்வலத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் ஊர்வல அமைப்புக் குழுவுடன் தொடர்பு கொள்ளவும்.

இப்பவனியில் கலந்து கொள்ளும் வண்டிகளுள் சிறந்த மூன்றுக்கு உயர்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவையும் முற்றும் முழுதாக நீக்கிக்கொண்டு எதிர்க்கட்சியில் சுதந்திரமான ஒரு குழுவாக இயங்குவதென்றும் இத்தீர்மானம் தெரிவிக்கிறது.

சுதந்திரமாக எதிர்க்கட்சியில் இயங்கும்போது எதிர்க்கட்சிக் கொராடாவின்கீழ் தமிழரசுக்கட்சி செயல்படமாட்டாதென இத் தீர்மானத்தை விளக்கிப் பேசுகையில் தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

திரு, டட்லிசேனநாயகாவின் தலைமையில் இயங்கும் இன்றைய அரசாங்கத்தோடு இலங்கைத தமிழரசுக்கட்சியின் 11-வதுமாநில மகாநாடு பரிசீலனை செய்து இந்த அரசாங்கத்தை இனியும் ஆதரிப்பதனால் தமிழ் பேசும் மக்களுக்கு எவ்வித நன்மையும் செய்யமுடியாதென்று இம்மகாநாடு கருதுவதால் இலங்கைத் தமிழரசுககட்சி ஆட்சிமன்றக் குழுவை ஆட்சிமன்றத்தில் சுதந்திரமாக இயங்கும் ஒரு எதிர்க்கட்சியாக செயல்பட வேண்டுமென இம்மகாநாடு பணிக்கிறது என்ற தீர்மானம் நேற்றுக்காலை உடுவிலில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி மகாநாட்டின் அரசியல்ஆலோசனைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பின்வரும் ஐந்துகாரணங்களைச் சுட்டிக்காட்டி, அரசாங்கத்துக்கு ஆதரவுஅளிப்பதை விடுத்து, சுதந்திரமாக எதிர்க்கட்சியில் இயங்கப் போவதாக மேற்கண்ட தீர்மானம் கூறுகிறது.

தீர்மானத்தில் கூறப்பட்ட ஐந்து காரணங்களும் வருமாறு;-

O மாவட்ட்சபைகள் அமைக்கப்படுமென்று அளிக்கப்பட்ட புனிதமானபெரிய வாக்குறுதியும், திருமலையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படுமென்ற உறுதிமொழியும் நிறைவேற்றப்படாமையாலும், O கைத்தொழில் சாலைகள்நிறுவுவதிலும், மீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்வதிலும், தமிழ்பேசும் பிரதேசங்களில் விசேஷமாக கிழக்கு மாகாணத்தில் போதிய போக்குவரத்துவசதிகள் ஏற்படுத்துவதிலும் அரசாங்கம் கைக்கொள்ளும் மோசமான பாரபட்சக் கொள்கையாலும், O தமிழ்ப் பேசும் மக்களுடைய கலவி கலாச்சாரத் தேவைகள்பூரணமாகப் புறககணிக்கப்படுவதோடு, இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் மக்களுக்கும் தென்னிந்தியாவுக்குமிடையிலுள்ள கலாச்சார தொடர்புகளைத் துண்டிக்க திட்டமிட்டுச் செய்யப்படும் முயற்சிகளாலும், O தமிழ் மொழிச்சட்டவிதிகளை அமுலாக்குவதை அரசாங்கம் காரணமின்றித் தாமதப் படுத்துவதாலும், O திறைசேரிச் சுற்றறிக்கைகள் 701, 702ஐ எமக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு முரணாக பாரபட்சமான முறையில் தமிழ்ப் பேசும் அரசாங்க ஊழியரில் பல பகுதியினருக்கு கஷ்டத்தையும் ஏமாற்றத்தையும் அளிக்கக்கூடியவகையில் அமுல் நடத்தி வருவதாலும் அரசாங்கத்துக்கு ஆதரவு அளிப்பதைக் கைவிட்டு சுதந்திரமாக எதிர்க்கட்சியில் இயங்குவது என தீர்மானம் கூறுகிறது''

### தயாராகுமாறு அழைப்பு

பொது மக்களிடையே இழந்த உரிமைகளை மீட்பதற்கு கட்சி எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் எதிலும் பூரண ஆதரவு அளிப்பதற்கு தம்மைக் கட்டுப்பாடாக தயாராக்கிக் கொள்ளுமாறு இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களை இம் மாநில மாநாடு அழைக்கின்றது என்றும் இத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

### சமஷ்டி ஆட்சியே ஒரேவழி

அரசியல் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட மற்றைய இரு தீர்மானங்களும் வருமாறு:

இன்றைய ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் இயங்கும் அரசாங்கத்தில 4 ஆண்டுகளாக அங்கம் வகித்தபின் கூடியிருக்கும் இலங்கைத்

குடியமர்த்த முடியும் என்பதற்காக பிரஜாஉரிமை தேசியஉரிமைபற்றிய விதிகளை இந்திய மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று பிரதம நீதிபதி ஹிதயதுல்லா கூறினர்.

அவர்கள் மாறிய நிலைகளுக்கு இலக்காகியிருப்பதால் முன்னிமையுடன் செயல்படவேண்டுமென்றுர்

கருத்தரங்கை பிரதம நீதிபதி ஆரம்பித்துவைத்தார்.

வெளிநாட்டில் குடியேறிய இந்தியருக்கும் அங்கு சும்மா சென்றவருக்குமிடையே நாம் வேறுபாடு காணலாகாது, நம்முடன் வாழவிரும்பினுல் இந்தியன் எங்கிருந்தாலும் இந்தியனே யாவான் என்றுர்.

நிறைவு விழாவையொட்டி நடைபெறும் கோலாகல நிகழ்ச்சிகளில் அலங்கார ஊர்வலமும் ஒன்ருக இருக்கும். இதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பவனியில் கலந்துகொள்ள ஏராளமான வர்த்தக நிறுவனங்களும், கிராம அபிவிருத்தி

காட்டியுள்ளன.

இந்த பவனியில் தமிழர் பெரும் வரலாற்றின் பல நிகழ்ச்சிகளை சித்தரிக்கும் அலங்காரவண்டிகள் கலந்து கொள்ளும்.

யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய வீதிவழியாக யூன் 5-ம் திகதி காலைமங்களவாத்

கலந்துகொள்ள விரும்புவோர் ஊர்வல அமைப்புக் குழுவுடன் தொடர்பு கொள்ளவும்.

இப்பவனியில் கலந்து கொள்ளும் வண்டிகளுள் சிறந்த மூன்றுக்கு உயர்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

(ந நி.)

# 'மாவட்டசபை வாக்குறுதி கைவிடப்பட்ட பின்னரும் அரசாங்கத்தை ஏன் தொடர்ந்து ஆதரித்தோம்?

## தமிழரசு பொதுச்செயலாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், வியாழன் ''மாவட்ட சபை வாக்குறிதியை அரசாங்கம் கைவிட்ட பின்னரும் நாம் தொடர்ந்து அரசாங்கத்தை ஆதரிப்பதற்கான காரணத்தை இங்கு விளக்க விரும்புகிறேன். தமிழ் மொழிச் சட்ட விதிகள் பற்றிய சுற்றறிக்கை வெளிவரச் செய்ததற்கும், எமது பிரதேசத்தைக் காப்பதற்கு நாம் எடுத்த நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கும் நாம் தொடர்ந்து அரசாங்கத்தை ஆதரித்தோம்'' என்று தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் நெற்றுக் காலை உடுவில் தமிழரசு மகாநாட்டின் அரசியல் மகாநாட்டில் சமர்ப்பித்த தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அதிக கால தாமதத்தின் பின் சென்ற ஆண்டு மாவட்ட சபைகள் பற்றிய சட்ட மூலம் பூர்த்தியாக்கப் பட்டது. அதைப் பூர்த்தியாக்குவதில் தாமதம் ஏற்பட்டமைக்கு மற்றைய தமிழ்க் கட்சியும் பெரும் அளவு பொறுப்பாளர்களாய் இருந்தனர் என்பதை இங்கு நான் கூறவேண்டியவனாய் உள்ளேன். ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ளே எதிர்ப்பு வளர்ந்தது. தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்கு தன்கட்சியின் ஆதரவைத் தானும் பெறமுடியாத சூழ்நிலையில் கௌரவ பிரதம மந்திரி அதைக் கைவிட்டார். இந்தப் பாராளுமன்றத்தில் மாவட்டசபைச் சட்ட மூலம் சமர்ப்பிக்கப் படமாட்டாதென்பது உறுதி மாவட்ட சபை மசோதா கைவிடப்பட்ட சூழ் நிலையிலும் நாம் அரசாங்கத்தை விட்டு வெளியேருது ஆதரவு கொடுத்த காரணத்தை இங்கு நான் கூற விரும்புகின்றேன். தமிழ் மொழிச் சட்ட விதிகள் பற்றிய சுற்றறிக்கையை வெளிவரச் செய்வதற்கும், எமது பிரதேசத்தைக் காப்பதற்கும் நாம் எடுத்த நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கும் நாம் அரசாங்கத்தில் தொடர்ந்து இருக்க வேண்டியது அவசியமாயிருந்தது. அன்றியும் தமது சொந்தக் கொள்கைக்கு மாருக எமது கட்சியை அரசாங்கத்திலிருந்து வெளியேறச் செய்து அரசாங்கத்தை வீழ்த்த வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு மாவட்டசபை மசோதாவை எதிர்த்த எதிர்க் கட்சிகளின் நோக்கம் நிறைவேற நாம் இடமளிக்க விரும்பவில்லை

தமிழ் பேசும் மக்களுக்கு திருகோணமலையில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவவும் ஒன்பது ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவும் உடன் நடவடிக்கைஎடுக்கப்படுமென்றும் எமக்கு உறுதி கூறப்பட்டது. ஆனல் இவ் வாக்குறிதிகளும் நிறைவேற்றப் படுமென்று இப்பொழுது நாம் எதிர்பார்ப்பதற்கில்லை.

தமிழ் மொழிச் சட்ட விதிகள் 1966 ஜனவரி 8-ந் திகதி பாராளுமன்றத்தில் புகுத்தப்பட்டன. ஆனல் அவற்றை அமுலாக்கும் திறைச் சேரிச் சுற்றறிக்கை சென்ற மாதமே வெளியிடப்பட்டது. அதைஅமுல் நடத்த எவ்வித ஏற்பாடும் செய்யப் படவில்லை. தமிழ் தெரிந்த ஊழியரைவடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பத்தானும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

கா. நி.

# ' இதுவரை பொறுத்தது போதும்'

## மாதர் மகாநாட்டில் தலைவி அழைப்பு

அளவெட்டி, புதன் தமிழரசுக்கட்சியின் 11-வது மாநாட்டின் 2-வது நாளான நேற்று ''தில்லாடி வள்ளியம்மை'' அரங்கில் மாதர் மகாநாடு நடைபெற்றது.

புதிய மாதர் முன்னணித் தலைவிதிருமதி. இராஜபூபதி அருணசலம் தனது தலைமை உரையில் கூறியதாவது:-

''மாபெரும் தமிழர் விடுதலைச் சின்னமாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாதர் முன்னணிக்கு இம்முறையும் என்னைத் தலைவி ஆக்கிய தங்கள் அனைவர்க்கும் எனது மனம் உவந்த நன்றியைக் கூறுகின்றேன்.

கடந்த பத்து ஆண்டுகளாகத் தங்கள் தலைவி என்ற நிலையில் தாங்கள் அனைவரும் எனக்குக் கொடுத்துதவிய ஒத்துழைப்புக்குத் திரும்பவும் நன்றி கூறுகின்றேன். இவ்வாண்டிலும் மாதர்குல மாணிக்கம் 'தில்லாடி வள்ளியம்மை' அரங்கில் பொறுப்புணர்ச்சி மிக்க இன்றைய சூழ்நிலையில், நிலையறிந்து செயலாற்றத் திரண்டு வாருங்கள் என்று நேசக் கரங்களை நீட்டி நிற்கின்றேன். 'பொறுத்தது போதும் பொங்கியெழுங்கள்' என எதிர்கொண்டழைத்துத் தங்கள் முன் நிற்கின்றேன். வாழ், எம்மையும் வாழவிடு' என்று வீர முரசு கொட்டி முழங்கி அழைக்கின்றேன்.

சத்தியமே உருவான எமது சத்தியாக்கிரகத்தில் தலைவர்களுடன் சரிசமமாக இறங்கினேம். தலைவர்க்கு உறுதுணை நல்கினேம். சிறைக் கூடத்திலும் தவக்கோலம் பூண்டேடம். அந்நியர் ஆட்சியில் அல்லற்பட்டுக்கிடந்த எமது பாரத நாட்டின்விடுதலைப்போராட்டத்தில் உண்மையும் நேர்மையும், உறுதியும் பூண்ட உத்தம தலைவர்களுடன் தோளோடு தோள்கொடுத்து உழைத்துஉரியைபூண்ட இந்திய மாதர்குல மாணிக்கங்களை நாம் நினைவுகூர வேண்டும். நாட்டைக்காக்க வீட்டுக்கொருவனை ஈன்று கொடுத்த எமது கடமையின் மத்தியில் வேல் வடித்துக்கொடுத்த வேந்தன் அவையில் வேல் எடுத்துக் கொடுத்து வீரப் போர் புரியச் சூழுரைத்து அனுப்பிய

# 'மொழி, கலாச்சார உரிமைக்கு முன் ஆட்சி உரிமை தமிழருக்குத் தேவை'

## தமிழரசு மகாநாட்டில் ம.பொ.சி.

யாழ்ப்பாணம், புதன் தமிழர்கள் தங்கள் மொழி உரிமை, கலாச்சார உரிமைகளைப் பெறுவதற்கு முன்னர் அரசுரிமையைப் பெறவேண்டும் என்று தமிழரசுக்கழகத் தலைவரும், தமிழக சட்டமன்ற உறுப்பினருமான சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞான கிராமணியார் உடுவில் தமிழரசுக்கட்சி மகாநாட்டில் நேற்றிரவு பேசுகையில் குறிப்பிட்டார்.

ஈழத்தமிழ்பேசும்மக்கள் நடத்தும் எந்த உரிமைப்போராட்டத்துக்கும் தமது ஆதரவு எப்போதும் இருக்குமென்றும் திரு. ம. பொ. சி. தெரிவித்தார்.

நேற்று மாலை மகாநாட்டின் 2-ம் நாள் நிகழ்ச்சியின் போது இடம் பெற்ற இலக்கிய மகாநாட்டில் திரு. ம. பொ. சி. சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமைவகித்தார். திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தமிழருக்குள் உயர்வு தாழ்வு என்ற பிரச்னை இரு[illegible]கும்வரை எமது உரிமைகளைப்பெற முடியாது. எமது உரிமைகளை யாரோ தர மறுக்கிருர்கள் என்று குறை கூறமுடியாது. எமக்குள்ளேயுள்ள பிளவுகளை முதலில் நாம் நீக்கவேண்டும். கடமைக்காக இல்லாவிடினும் உரிமைக்காகவாவது தமிழர்கள் தீண்டாமையை ஒழிக்கவேண்டும்.

### அரசுரிமை பெறவேண்டும்

தமிழர்கள் தங்கள் மொழியுரிமை, கலாச்சார உரிமைகளைப் பெறுவதற்கு முன்னர் அரசுரிமையைப் பெறவேண்டும். பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்திடம் மொழியைத் திணிப்பது ஏகாதிபத்தியம்தான். மொழியால், கலையால், கலாச்சாரத்தால் நாம் தமிழராக இருந்தாலும் நான் இந்தியன்; நீங்கள் இலங்கையர்கள். எங்கள் ஆட்சி வேறு, எங்கள் அரசியல் வேறு.

நான் அரசியல்வாதியாக இங்கு வரவில்லை. கலாச்சார ரீதியாக வந்துள்ளேன்

இங்கு என்னை வர அனுமதித்ததற்கு டட்லி அரசாங்கத்துக்கு நன்றி கூறக் கடமைப்பட்டவன்.

### சந்தேகத்தை போக்குவேன்

நான் சிங்கள அரசியல் தலைவர்களைச் சந்திக்க நேர்ந்தால் இலங்கை-இந்தியத் தமிழர்களிடையேயான சந்தேகங்களை நீக்குவேன். தமிழன் எங்கு துன்பப்படுகிருனே அங்கெல்லாம் போக நாம் தயாராகவேண்டும். நான் கடலுக்கு அப்பால் அரசியல்வாதி; ஆனல் எட்டுத்திக்கும் கலாச்சாரவாதி. நான் இங்கு தமிழ்ப்பிரதிநிதியாக வந்துள்ளேன். எனது போராட்டத்திற்கு ஓரிருமாதங்களிருக்கின்றன, உங்கள் எந்த உரிமைப் போராட்டத்துக்கும் நான் கடலுக்கு அப்பால் இருந்து ஆதரவு தருவேன் என்பதைஉறுதியாகக் கூறுகிறேன்.

(கா. நி)

### பயங்கரமானதாம்

கண்டி, திங்கள்

'சமீபத்தில் வெளியான திறைசேரிச் சுற்றுநிருபம் பயங்கரமானதும் சிங்கள மக்களுக்கு தீங்கு விளைவிக்கத்தக்கதுமாகும்' என வெலியம்பேயில் நடைபெற்ற கூட்டணிக்கட்சிகளின் பிரசாரக்கூட்டத்தில் பேசிய திரு. ரி. பி. இலங்கரத்தின கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதி 20 பரப்பு காணி, வீடு, நன்னீர் கிணறு, செய்பயிர்களுடன் கண்டி வீதி, கச்சேரி, புங்கங்குளம் புகையிரத ஸ்தானம், கனகரட்னம் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களுக்கு அண்மையில் விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். 184, கண்டி வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் தொடர்புகொள்ளவும். 922

2 காணிகள்:

சுண்டிக்குழி பழைய பூங்கா வீதியில் இரண்டு நிலப்பரப்புக் காணியும், ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் 20 பரப்பு தோட்டக் காணியும் 1/7, புதுறோட், கொய்யாத் தோட்டம் இல்லத்திற்கு விண்ணப்பிக்கவும். 926

முட்டை இடும் கறுப்புக் கோழிகள் Ex. Nel Farm, மற்றும் ஒரு மாதச் சேவற் குஞ்சுகளும் பேட்டுக் குஞ்சுகளும் உடனடியாக விற்பனைக்குண்டு. பிரணவப் பண்ணை, கந்தரோடைவீதி, சுன்னாகம். 910

### தேவை

தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் (ஆங்கிலம், தமிழ் மொழிகள் மூலம் கற்பிக்க) உடனடி நியமனத்திற்கு. இரண்டாந்தர ஆரம்ப பயிற்சி பெற்ற ஜி. சீ. ஈ. உயர்தர (லண்டன் விரும்பத்தக்கது) அல்லது சங்கீதமும், நாட்டியமும். 26-4-69-க்கு முன் அதிபர், நவீல்ட் குடுடர், செவிடர் பாடசாலை. கைதடி என்ற முகவரிக்கு தகைமை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். 92

### கல்வி

G. C. E. வட இலங்கைச் சங்கீதசபைப் பாடத்திட்டங்களுக்கமைய வாய்ப்பாடு, வயிலின், மிருதங்கம் கற்பிக்கப்படும். விபரங்களுக்கு: கலாபவனம், கட்டுவன் சந்தி, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை. நடத்துபவர்: செல்வி மாது சிரோன்மணி - வேலாயுதர், சங்கீதபூஷணம். 919

1969-ம் ஆண்டுக்குரிய க. பொ. த. சாதாரண உயர்தர பரீட்சைகளுக்கு வர்த்தக, கலை, விஞ்ஞான ஆங்கில சிங்கள தையல் வகுப்பு

# 'தேசிய அரசாங்கம் விவசாயிகளுக்கு செய்த நன்மையை மறக்கமுடியாது'

## தமிழரசு மகாநாட்டில் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

''தேசிய அரசாங்கம் என்ன தீமையைத்தான் செய்தாலும், அது விவசாயிகளுக்குச் செய்துள்ள நன்மையை எவரும் மறுக்கவோ, மறந்துவிடவோ முடியாது.''

அமரர் இராஜவரோதயம் அரங்கில் நேற்று நண்பகல் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டுக்குத் தலைமைவகித்த இலுப்பைக்கடவைக் கிராமசபைத் தலைவரான திரு. வே. கைலாசபிள்ளை தெரிவித்தார்.

இரண்டாம் நாள் விழாவின் காலை நிகழ்ச்சியாக நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில் திரு. கைலாசபிள்ளை மேலும் பேசியதாவது:

''எந்தப் போராட்டத்தைத் தான் தமிழரசுக்கட்சி ஆரம்பித்தாலும் அதற்கு உணவு அளிக்க வேண்டிய பொறுப்பு விவசாயிகளைத்தான் சேர்ந்தது. விவசாயிகளின் உதவியின்றி எந்தப் போராட்டத்தையும் நடாத்தமுடியாது ஆனால் பல இன்னல்கள் விவசாயிகளுக்கு இன்னமும் இருந்தே வருகின்றன இவைகளை நீக்கத் தமிழரசுக்கட்சியினர் முன்வரவேண்டும்.

தேசீய அரசாங்கம் என்ன தீமைதான் செய்தபோதிலும் விவசாயிகளுக்கு அது செய்த நன்மை பாராட்டப்படவேண்டியதாகும். அது தன் வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்தி, இலங்கையில் உற்பத்தி செய்யச் சந்தர்ப்பமளித்ததாகும்.

அரசாங்கம், அந்நியச் செலாவணிச் சான்றிதழ் இறக்குமதி மூலம் தனி வர்த்தகர்களுக்கு லாபம் வரக்கூடியதாகவும், ஏழைக் கமக்காரர்களுக்குக் கெடுதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது இது மீண்டும் புனராலோசனை செய்யப்படவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

திருமலை பாரதி விவசாயக் கழகத்தைச் சேர்ந்த திரு. கே. திருநாவுக்கரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''திட்டவட்டமான கொள்கை எதுவுமின்றித் தலைவர்கள் நடவடிக்கைகளில் இறங்குவது தீங்கையே விளைவிக்கக்கூடியதாகும். முதலில் பறிபோய்க் கொண்டிருக்கும் எமது நிலங்களைப் பாதுகாக்க வேண்டும். பின்னர் தான் எமது உரிமைகளுக்காசப் போராடவேண்டும்.

சிங்கள மக்களின் பிரச்னைகளை நிவர்த்திசெய்யவும், அவர்கள் உரிமைகளை நிலைநாட்டவும் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா எவ்வாறு போராடுகின்றாரோ, அதேபோல எமது தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களது உரிமைக்காகப் போராட முன்வரவேண்டும்'' என்றார்.

கல்முனையைச் சேர்ந்த திரு. நோ. மணிவாசகன பேசுகையில் ''இலங்கையின் நெற்களஞ்சியமாக விளங்கும் கிழக்கு இலங்கை இன்னமும் போதிய அபிவிருத்தி அடையாமலிருப்பது வருந்தத்தக்கதாகும்'' என்றார்.

இலங்கைத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த திரு. க. முத்துசாமி, கிளிநொச்சியைச் சேர்ந்த திரு. அ. க. இராமலிங்கம், இணுவில் திரு. பொ. கனகசபாபதி, உடுவில் திரு. வி. சிராளசிங்கம் ஆகியோரும் பேசினார்கள். (கா. நி.)

### கடல் கொந்தளிப்பு ஊழியர் பாதிப்பு

உடுபிட்டி, புதன்

எஸ். எஸ். எப், சாரிஸ் என்னும் அரிசிக்கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தில் மூன்றுநாள் இறக்குமதி செய்துவிட்டுக் கடல் கொந்தளிப்புக் காரணமாக வேலைகளை நிறுத்திவிட்டது. கடந்த 5-ம் திகதி முதல் இக்கப்பலில் இறக்குமதி வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. இறக்குமதி செய்வதற்கென காரைநகரிலிருந்து வரவழைக்கப்பட்ட வத்தைகள் இதனால் உடனடியாக காரைநகருக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

இதனைத்தொடர்ந்து கப்பல் ஏஜண்டுகள் உடனடியாக இறக்குமதி வேலைகளைத் தொடங்கவேண்டும் என்றும் இல்லாவிடில் கப்பல் திருப்பி அனுப்பப்படுமென்றும் உணவுக் கட்டுப் பாட்டு இலாகாவைக் கேட்டுள்ளனர். ஆனாலும் கடல் கொந்தளிப்பு அடங்கிய பின்னரே இறக்குதி வேலை தொடங்குமெனஎதிர் பார்க்கப்படுகிறது. இறக்குமதி வேலை ஸ்தம்பிதம் அடைந்துள்ளதால் தொழிலாளர்களும் ரவிக் கூமாஸ்

### ராணி

யாழ்ப்பாணம்)

### தீவுப்பகுதியில் வரட்சி

அல்லைப்பிட்டி, புதன்

தீவுப்பகுதியில் காலமழை பெய்யாததினால் குளம் கிணறு முதலியவற்றில் நீர் வற்றிவிட்டது. குடிப்பதற்குக் கூட குடிநீர் கிடைக்காமல் போய் விடுமோ என இப் பகுதி மக்கள் அஞ்சுகின்றார்கள். கடும் வரட்சியின் காரணமாக இப்பகுதி மக்களுக்கு ஒருவித வெப்புச் சுரம் ஏற்பட்டு வருகின்றது. என்றும் குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.

இங்குள்ளவர்கள் வெகு விரைவில் மழை பெய்வித்து வரட்சியை நீக்குமாறு கடவுளுக்கு விஷேச பூசைகள் செய்வித்து வருகின்றார்கள்.

நெடுந்தீவு, புங்குடுதீவு, எழுவைதீவு போன்ற இடங்களிலுள்ள கால் நடைகளுக்கு ஒரு வித தொற்று நோயுண்டாகி திடீரென இறந்துவிடுகின்றன.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 10—4—69**

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ

பகல் 12-00சித்திரகானம் 1-00 தேர்ந்த இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 சங்கீத பாராயணம், 6-30 விளையாட்டு விமர்சனம்- 6-45 பாவளம் 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச்சுருள் 9-46 பாட்டு.

### வெற்றி தோல்வி இல்லை

குரும்பசிட்டி, புதன்

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகமும் புன்னாலைக்கட்டுவன் வடக்கு விளையாட்டுக்கழகமும் கலந்துகொண்ட முதற்பிரிவுச் சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டி எவருக்கும்வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

குரும்பசிட்டி கோஷ்டி தனது முதல், இரண்டாவது இன்னிங்ஸ்களில் முறையே 59, 55 ஆட்டங்களைக் கைப்பற்றியது புன்னாலைக்கட்டுவன் கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் 53 ஓட்டங்களையும் இரண்டாம் இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டது.

......

### பாங்கொக் செல்கிறார்

பருத்தித்துறை, செவ்.

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து இலங்கை உதைபந்தாட்ட வீரருள் ஒருவராக பாங்கொக் செல்லவிருக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவன் திரு. கே. ஸ்ரீதரனை ஆசிரியர்களும் நண்பர்களும் கொடிகாமம் புகையிரத நிலையத்தில் வழியனுப்பினர், விளையாட்டாசிரியர் திரு. எம். இராமக்கிருஷ்ணன் அளித்த பயிற்சியே தாம் வெளிநாடு போக முக்கிய காரணமென ஸ்ரீதரன் பிரியும்போது கூறினார்.

### எதிரிகள் விடுதலை

வல்வெட்டித்துறை, புதன்

உடுப்பிட்டியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை, சுப்பிரமணியம், சற்குணபாக்கியராசா, மேகன்ராசா ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். சிவக்கொழுந்து, வே. பூரணம் ஆகியோருக்கு அடித்துக் காயப்படுத்தியும், அவர்களிடத்திலிருந்து பணத்தையும், சங்கியையும் களவாடியதாக வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. மே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளை சுற்றவாளிகளாகக் கண்டு விடுதலை செய்தார்.

### கேள்விவிளம்பரம்

முல்லைத்தீவு பட்டணசபையின் வீதிகள் திருத்த வேலைக்கும், வெளிச்சவீட்டு ஒழுங்கை அமைத்தலுக்குமான கேள்விகள் 17-4-69ந் திகதி காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மற்றும் விபரங்களை இக்காரியாலயத்தில் விசாரித்து அறிந்துகொள்ளலாம்.

ம. சூ. வஸ்தியாம்பிள்ளை,
தலைவர்,
பட்டணசபை,
முல்லைத்தீவு.

பட்டணசபைக்காரியாலயம்
முல்லைத்தீவு,
1-4-69. 1511

### கேள்வி விளம்பரம்

கோழி, கால்நடை உணவிற்கு ஏற்ற பெருந்தொகையான வட்டாணுக் கடலைக் கோது விற்பனைக்கு விற்பனைத் திணைக்கள மத்திய களஞ்சிய சாலையில் உண்டு.

இதற்கான கேள்விகள் யாழ்ப்பாணம் உதவி விற்பனை ஆணையாளரால் 17-4-69-ந் திகதி 4-30மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

உதவி விற்பனை
ஆணையாளர்.

விற்பனைத்திணைக்களம்:
அரசாங்க செயலகம்.
யாழ்ப்பாணம். 1510

### வெற்றிடங்கள்

#### யாழ்ப்பாண மாநகரசபை

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் மாநகரசபை ஆணையாளரினால் கோரப்படுகின்றன.

1. வேலைகள் மேற்பார்வையாளர்
2. சௌக்கிய மேற்பார்வையாளர்.
3. சந்தை காவலாளி
4. ''மீட்டர்'' வாசகர்.

2. விண்ணப்பதாரர்கள் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களாயிருத்தல் வேண்டும்

3. **தேவையான தகைமைகள்**

A. **வயது**:- விண்ணப்பதாரர்கள் 1-5-69 அன்று 35 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

B. **கல்வி**:- தமிழ்மொழி மூலமோ அல்லது ஆங்கில மொழி மூலமோ ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சை சித்தியடைந்திருத்தல் வேண்டும். வேலை செய்வதற்குத் தேவையான ஆங்கில அறிவுடையவர்களுக்கு கூடிய வாய்ப்பளிக்கப்படும்.

C. **அனுபவம்**:- விண்ணப்பதாரர் தாங்கள் விண்ணப்பிக்கும் வேலையில் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவமாவது பெற்றிருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் அண்மையில் பெற்ற இருநற்சாட்சிப் பத்திரங்கள், தகைமைகள், அனுபவம் ஆகியன பற்றிய பத்திரங்களின் பிரதிகளை இணைத்து அனுப்பவேண்டும்.

5. விண்ணப்பங்கள் 22-4-69-ம் தேதியன்றோ அல்லது அத் தேதிக்கு முன்னரோ மாநகரசபைஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

6. எந்த விதத்திலும் ஆதரவுதேடும் விண்ணப்பதாரர் தகைமையற்றவராவர்.

**நகரசபை** **ஏ, ரி. சுந்தரம்**
யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர்
7-4-1969 1513

### 'டயமண்ட்' வெற்றி

பருத்தித்துறை, செவ்.

நெல்லியடி ஸ்மேஸ் விளையாட்டுக் கழக ஆதரவின் கீழ் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரி டயமன்ட் 'பீ' கோஷ்டியும், அல்வாய்மனோகரா கோஷ்டியும் மோதிக்கொண்டதில், டயமன்ட் கோஷ்டி 2 1 கோல்களால் வெற்றியீட்டியது. கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு திரு. சி. ஜே. திரவி மத்தியஸ்தம் வகித்தார்'

### பண்டத்தரிப்பு இராமசபை

#### கேள்வி அறிவித்தல்

**மாதகல் காஞ்சோண்டியான் றோட்டு**

**அரசாங்க நன்கொடை வேலை**

மேற்படி றோட்டுச்கான கேள்விப்பத்திரங்கள்1969ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி வரைக்கும் என்னால் சீல்வைத்த ரெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப் பணம் ரூபா 5/-ம்: கேள்விக் கட்டுப்பணம் ரூபா 50/ம் கட்டியதன் பின்னரே கேள்விப்பத்திரம் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் 18-4-69-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணி வரையும் இச்சபையில் வழங்கப்படும். இதற்காயஏனைய விபரங்களை மேற்படி சபையில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளவும்.

குறிப்பு:

கேள்விப்பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

(ஒப்பம்)
சி. சி. கனகசபாபதி;
அக்கிராசனர்,
கிராமசபை, பண்டத்தரிப்பு
7-4-69 1512


### புத்தாண்டு விழா

பருத்தித்துறை, புதன்

புத்தாண்டு தினத்தன்று வழக்கம் போல உடுப்பிட்டித் தொகுதியில் நடக்கவிருக்கும் விளையாட்டு விழாவுக்கு உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமை தாங்குவார்.

இவ்விழாவில், 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி. மாட்டுவண்டிச் சவாரி, போர்த்தேங்காயடி, பெண்களுக்கான சமநிலை யோட்டம், சங்கீதக் கதிரை, முட்டி உடைத்தல், வழுக்குக் கம்பந்தில் பொன் முடிச்சு எடுத்தல் ஆசியன நிகழும்.

இமத்தொனி முருகன் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட அரங்கில் திரு. சிவசிதம்பரம் பரிசில்களை வழங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரோன்மணி - வேலாயுதர், சங்கீதபூஷணம். 919

1969-ம் ஆண்டுக்குரிய க. பொ. த. சாதாரண உயர்தர பரீட்சைகளுக்கு வர்த்தக, கலை, விஞ்ஞான ஆங்கில சிங்கள தையல் வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாருக்கும் விடுதி வசதியுண்டு வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 1924-ல் ஆரம்பிக்கப்பட்டது 920


ராஜா 87வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்கள்
அரைக்கட்டணத்துடன்
அனுமதிக்கப்படுவர்


கையே விளைவிக்கக்கூடியதாகும். முதலில் பறிபோய்க் கொண்டிருக்கும் எமது


ராணி
யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, & 9-45
Jay Mukerji
Asha Prackh
in
LOVE IN TOKYO
(HINDI)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45p.m
Poya, PrePoya 10-30 A.M.
Kazgaras - Steward Granger
Gabriellalicudi
in
THE LAST SAFARI


கேட்டுள்ளனர். ஆனாலும் கடல் கொந்தளிப்பு அடங்கிய பின்னரே இறக்குதி வேலை தொடங்குமெனஎதிர் பார்க்கப்படுகிறது. இறக்குமதி வேலை ஸ்தம்பிதம் அடைந்துள்ளதால் தொழிலாளர்களும் ரவிக் குமாஸ்தாக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.


மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ஆனந்தன் - ஹேமலதா
நடித்த
விஜயபுரி வீரன்

REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9 45 p.m.
David Mccallum,
Stella Steven
in
THE SECRET FILE OF SOL MADRID
(Spy Film / Adults only)

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30க்கு மட்டும்
சிவாஜி—சௌகார் ஜானகி
நடித்த
மோட்டார் சுந்தரம்பிள்ளை

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
வாலிப விருந்து


விமர்சனம்- 6-45 பாவளம் 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச்சுருள், 9-46 பாட்டு.

## இன்றைய பலன்

10-4-69

பங்குனி மீ 28-ம் உ

வியாழக்கிழமை

திதி-அட்டமி பகல் 8-37 மேல் நவமி.

நட்சத்திரம்-உத்தராட்டம் இரவு 8-52 மேல் திருவோணம்.

ராகுகாலம்- 1-36— 3-06.

சுபநேரம்- 7-36— 9 06.

இன்று பிறந்தவர்களுக்கு- ஏமாற்றங்களு மத்தியில் சில முன்னேற்றங்களுண்டு. சிலர் அருமையான சந்தர்ப்பங்களை இழக்க நேரிடலாம். கோபத்தை அடக்கிக் கொண்டால் குடும்பத்தில் அமைதி தவறும். புதுத் தொழில் புரிவோர்க்குப் புனிதமான ஆண்டாகும்.

மேஷம்- தானிய விருத்தி தரும சிந்தை.

ரிஷபம்- இதயக்கமலம் இன்பத்தால் மலரும்.

மிதுனம்- இரும்புமனம் வேண்டாம் வருந்தவும் நேரிடும்.

கடகம்- கண்ணின் கடைப்பார்வை காதலில் வெற்றி.

சிம்மம்- தூது விடுப் படலம் துன்பத்தில் முடிவு.

கன்னி- பிதாவழிச்சுகம் பேச்சில் திருப்தி.

துலாம்- தொழில் பெருமை துன்பம்மடியும்.

விருச்சிகம்- விளி திறக்கும் வழி பிறக்கும்.

தனுசு- தொழிலில் தடை தொல்லைகள் தாக்கும்.

மகரம்- குடும்பக்கவலை கொள்கையில் ஆட்டம்.

கும்பம்- இனியவை உரைத்தல் இனசன மகிழ்ச்சி.

மீனம்- குயில் வேட்டை ஆடி கோட்டானைப் பிடிப்பாய்.

—சோதிடக்கலாநிதி—

திருமலை வேலுப்பிள்ளை


புத்தாண்டு திரை விருந்து !!!
கிங்ஸ்லி-மைலன், (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன், (யாழ். நகர்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில்





கலைப்பேரரசர் எம். ஜி. ஆர்.
ஆடலழகி ஜெயலலிதா !!
எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிந்த
சரவணா பிலிம்ஸ்
சந்திரோதயம்
டைரக்ஷன்: கே. சங்கர்

4-வது வெற்றி வாரம் !
கெப்பிட்டல் (கொழும்பு)
முத்துராமன், ராஜன், பாரதி, பானுமதி
நடித்த
பூவும் பொட்டும்

டயரும்ஸ்
ஸ்தாபனத்தாரின்
புத்தாண்டு
மலிவு விற்பனையில்
பெண்களின்
சட்டைகளுக்கும்,
'சிப்ட்'களுக்கும்
தேவையான
கண்கவர் டிசைன்களில்
கிளேஸ் ஹொட்டன்
[கதவ, யன்னல் சீலையாகவும் உபயோகிக்கலாம்]
ரூபா 4-50மாத்திரம்
டயரும்ஸ்
54, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.


சுற்றவாளிகளாகக் கண்டு விடுதலை செய்தார்.

தாட்டச் சுற்றுப் போட்டி வெட்டி விக்னேஸ்வராக் யில் வதிரி டயமன்ட் 'பீ' கல்லூரி மைதானத்தில் நட கோஷ்டியும், அல்வாய்மனோ ந்த இப்போட்டிக்கு திரு. சி. வகித்தார்'

ஜே. திரவி மத்தியஸ்தம்




நிகரற்ற கவர்ச்சிப் பெண்ணுகை நிச்சய வழி—




கோயா பெர்பியூமும் கோலோனும்

உங்கள் பெண்மையின் மென்மை வனப்பை மேலும் வனப்பாக்க, நம்பத்தகுந்த நறுமண வாசனைத் திரவியங்கள் கோயா பெர்பியூமும் கோலோனும்.

உலகின் உன்னத வாசனைத் தயாரிப்பாளர்கள் தனித்தனிச் சிறப்புடன் சீர் செய்தளிக்கும் எழு மனங்கவர் நறுமணங்கள் கொண்ட கோயா பெர்பியூமும் கோலோனும், நாகரிக மாநகர் தோறும் வசீகர வனிதையரால் விரும்பித் தேர்ந்தெடுத்துப் பாவிக்கப்படுவன.

நாள் முழுதும் நீடித்த நறுமணந் தரும் பரிமளமான கோயா பெர்பியூமும் கோலோனும், நாள்தோறும் பாவியுங்கள்.

பிளாக் ரோஸ், கார்டினியா, என்டைஸ், நம்பர் 5,
லவ் அஃபயர், டைம்லஸ், வைல்ட் சில்க்.

லண்டன், பரிஸ், நியூயார்க், மாநகரங்களில் மகிமை பெற்றது கோயா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூயஸ் கால்வாயின் குறுக்கே மீண்டும் உக்கிரமமான போர்


## 40 இஸ்ரேலியரைக் கொன்றதாக அரபுத்தரப்பில் அறிக்கை

கெய்ரோ, ஏப்ரல் 9

**சூயவஸ் கால்வாயின் தென்பகுதியில் நேற்று மீண்டும் அரபுப்படைகளுக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் கடுமையான சண்டை ஏற்பட்டது சமீபகாலத்தில் மிகக் கடுமையாக நீண்ட நேரம் இச்சண்டை இடம்பெற்றுள்ளதாக நிருபர்கள் அறிவிக்கின்றனர்.**

நேற்று இருதடவைகள் மோதல் ஏற்பட்டது. முதல் தடவை 5 மணி நேரம் பீரங்கிகளாலும் இயந்திரத் துப்பாக்கிகளாலும், டாங்கிகளாலும் இருதரப்பினர்களும் தாக்கிக் கொண்டார்கள். இந்தச் சண்டையைத் தொடர்ந்து சூயஸ் கால்வாயின் முக்கிய பகுதிகளில் ஊரடங்குசட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தச் சண்டையில் 40 இஸ்ரேலியர் கொல்லப்பட்டதாக அரபுத்தரப்பில் அறிவிக்கப்பட்டது. ஆனால் 4 இஸ்ரேலியர் மாத்திரமே கொல்லப்பட்டதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. அக்கபார் என்ற பிரதேசத்தின் மீது இஸ்ரேலியர் விமானத்திலிருந்து குண்டுவீசித் தகர்த்தார்கள். இஸ்ரேல் பிரதேசத்தைநோக்கி அரபுகொமாண்டோ துருப்புகள் ரொக்கட் தாக்குதல் நடத்துவதைத்தடுப்பதற்காகவே அப்பகுதிகளில் குண்டுவீசியதாக இஸ்ரேல் கூறியது. இருதரப்பினரும் ஐ. நா. பாதுகாப்பு சபையிடம் புகார் செய்துள்ளனர்.




## வல்லரசு கூட்டம் இடம்பெறும் வேளையில்...

நியுயோர்க்கில் நான்குவல்லரசுகளின் ஐ. நா. பிரதிநிதிகள் இரண்டாவது தடவையாகக்கூடி மேற்காஸியா பற்றி ஆலோசனைகள் நடத்திக்கொண்டிருந்த வேளையில் சுயேஸ் கால்வாய்க்கு குறுக்கே மீண்டும் சண்டை நடைபெற்றுள்ளது.

நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகள் நேற்று மீண்டும் நியுயோர்க்கில்கூடி சுமார் மூன்றரைமணிநேரம் பேசினார்கள். ஆனால் பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. அடுத்த திங்கட்கிழமை மீண்டும், அமெரிக்கா சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பிரதிநிதிகள் மீண்டும் கூடிப்பேசுவார்கள்.

### வாஷிங்டனில் ஜோர்டான் மன்னர்

ஜோர்டான் மன்னர் ஹுஸேசன்வாஷிங்டனில் அதிபர் நிக்ஸனையும், ராஜாங்க அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸையும் சந்தித்துப் பேசியிருக்கிறார். ராஜாங்க அமைச்சருடன் அவர்சுமார் மூன்றரைமணிநேரம்ஆலோசனைகள் நடத்தினார். ஆனால் விபரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

### கெய்ரோவில் பிரி. கன்சர்வேடிவ் தலைவர்

பிரிட்டிஷ் எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் திரு. ஹீத் கெய்ரோவுக்கு விஜயம்செய்திருக்கிறார். மேற்காஸிய நிலைமையை நேரில் அறிந்துகொள்வதற்காக வந்திருக்கும் அவர் அதிபர் நாஸரையும் வெளிஉறவு அமைச்சர் றியாட்டையும் சந்தித்துப் பேசினார்.

## ஹரிஜனர்க்கு சேவைபுரிய பூரிசுவாமிகள் தயாராம்

## பாட்னாவில் தாம் பேசியது திரிக்கப்பட்டதாக அறிக்கை

விஜயவாடா, ஏப். 9

தீண்டாமை, தேசிய கீதம் ஆகியவை பற்றிதாம் சொன்னதை அக்கறையுள்ள சிலரும், பத்திரிகைகளும் திரித்துக் கூற முற்பட்டுள்ளதாக பூரி சங்கராச்சாரியார் கூறியிருக்கிறார்.

பொது மக்களிடையே தமது செல்வாக்கை குறைக்கும் நோக்கத்துடன் இவ்வாறு ... அவர் ...

நேற்றிரவு டில்லிக்கு கிழ... முன்னர் அவர் ...

விதமான வேற்றுமையும் இருக்கக்கூடாதென்பதை நான் வலியுறுத்துகிறேன்.

அடிப்படையாகவும் மனப்பூர்வமாகவும் இந்த வேற்றுமை உணர்ச்சியை நாம் அகற்றவேண்டும்.

இந்து சமுதாயத்தில் அவர்களும் மற்றவர்களும் சமம்என்று கருதவேண்டும்.

அப்போதுதான் இந்தப் ... அனைத்தும் முடி... அனைத்தும் தீரும்.

தேசியகீதம்பற்றி பூரி சங் ...

## "உரிமைப் போராட்டத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்"

### எஸ். ஜே. வி. க்கு மாதர் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

"மீண்டும் உரிமைப் போராட்டத்திற்கு தமிழர்களாகிய நாம் தயாராகி விட்டோம். விடுதலை இயக்கத்தில் சோந்து போராட மக்கள் அணி அணியாகத் திரண்டு வந்துவிட்டார்கள். தந்தை செல்வா எங்களை உரிமைப் போராட்டத்துக்கு மீண்டும் அழைத்துச் செல்ல வேண்டும்."

மேடையிலிருந்த திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்திடம் இந்த அழைப்பைப் பகிரங்கமாக விடுத்தார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்.

இரண்டாம் நாள் விழாவில் மாலை நிகழ்ச்சியில் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் மேலும் பேசியதாவது:-

இனியும் நாம் பிறருக்காக எதற்காகப் பொறுத்திருந்து பொன்னான காலத்தை வீணாக்க வேண்டும். எம்மை எல்லாம் போராட்டப் பாதைக்கு அழைத்துச் செல்ல எங்கள் தலைவர்கள் முன்வர வேண்டும். இது தான் மாதர்களாகிய நாம் எம் தலைவர்களுக்கு விடுக்கும் பணிவான வேண்டுகோளாகும்.

எமது கஷ்டங்களைப் பார்த்து நீலிக் கண்ணீர் வடித்த சிங்கள ஆட்சியாளர்களைப் பார்த்து அவர்களுடன் சேர்ந்து ஏமாற்றப்பட்டோம் ஏமாறினோம் இன்று உணர்ந்து விட்டோம். ஏன் இந்த நிலை ஏற்பட்டது தமிழர்களுக்குள்ளேயே உள்ள எதிர்ப்புத்தான்.

இனியும் நாம் அடிமைகளாக வாழக்கூடாது. தமிழரசு பஸ்ஸைத் தவறவிட்டு விட்டது என்றார்கள். முதலில் பண்டா ஒப்பந்தம் பின்னர் டட்லி ஒப்பந்தம் இரண்டாவதில் ஒரு மந்திரிப் பதவியையும் எடுத்தோம் அமைச்சரவையில் ஒரு மந்திரியாக எமது உறுப்பினர் இருக்க வேண்டும்என விரும்பித்தான் சேர்ந்தோம். முதலாவது மாவட்டசபைகிடைக்காமல் போனதற்கே தமிழரின் தனிப்பெரும் தலைவர் எனக் கூறப்படும் ஒருவரே காரணமாகும்.

நாம் இழந்த உரிமைகளைப் பெற தமிழ் மக்களின் சுபிட்சமான எதிர்காலத்தை நிர்ணயிக்க எந்தச் சிங்கள ஆட்சியுடன் சேர்வதிலும் அர்த்தமில்லை.

போராட்டத்துக்கு நாம் முன்வந்து விட்டோம் அதன் மூலம் தமிழினத்தின் உரிமைகள் மீண்டும் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையின் பேரில் ஒவ்வொரு மாதரும் போராட்டத்தில் குதிக்க மீண்டும் முன்வந்துள்ளோம் என்றும் திருமதி மங்கற்கரசி குறிப்பிட்டார்.

கா. நி.

## அந்தரங்க சுத்தி இல்லாத தலைமை

### மொழிப்பிரச்னை வெடிபபுக்கு காமராஜ் கூறும் காரணம்

புதுடில்லி, ஏப். 9

அந்தரங்க சுத்தியுள்ள தலைமை இல்லாததே மொழிப் பிரச்னை வெடித்ததற்குக் காரணம் என்று திரு. கே. காமராஜ் கூறினார்.

பழைய கலைமுறை முழுமுழுப்பின்றி ஹிந்தியைக் கற்றது. காந்திஜியின் தலைமையின் கீழ் ஹிந்தி சுதந்திர இந்தியாவின் மொழியாகும் என நம்பி வளர்த்தோம் என்றார் அவர்.

... கழகமொன்றை அமைப்பதில் உதவுவதாக 'யுனேஸ்கோ' ஒப்புக்கொண்டுள்ளது. இதுவிஷயமாகஎன்னசெய்ய முடியும் என்பது பற்றி தமிழ் நாட்டு அரசாங்கத்துடன் தாம் விரைவில் ஆலோசனை நடத்தவிருப்பதாக மந்திரி கூறினார்.

இந்த வகுப்பை திரு. காமராஜ் துவக்கி வைப்பது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் கூறினார்.

### கருணாநிதிக்கு சிலைவைக்க யோசனை

சென்னை, ஏப். 9

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கு சிலை வைக்கவேண்டுமென்று சென்னைமாநகராட்சி 10வது வட்டார (மையாப்பூர்) கமிட்டி முடிவு செய்திருக்கின்றது. இத்தீர்மானம் நகர கமிஷனரின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### செயற்கை இருதயக்கரா மரணம்

நியுயோர்க் ஏப் 9

டெக்ஸாஸ் ஆஸ்பத்திரியொன்றில் செயற்கைஇருதயம் பெற்று சுமார் 65 மணிநேரம் உயிருடனிருந்த நோயாளி நேற்று மரணமானார். அவருக்கு 26 மணிநேரத்தின்பின்நிமோனியா ஏற்பட்டதாகவும் கிட்னிகள் இயங்காமல் போனதாகவும் கூறப்படுகிறது.

### ரூ. 18 லட்சம்

கோட்டை, புதன்.

இலங்கை மட்பாண்டக் கூட்டுத் தாபனத்துக்கு கடந்த வருடத்தில் 18 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது. கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் இந்த தகவலை வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுமை மீண்டும், அமெரிக்கா சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பிரதிநிதிகள மீண்டும் கூடிப்பேசுவார்கள்.

தலைவர்

பிரிட்டிஷ் எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் திரு. ஹீட்டீஸ்


கும் அவர் அதிபர் நாஸேரையும் வெளிஉறவு அமைச்சர் றியாட்டையும் சந்தித்துப் பேசினர்.


# கையிருப்பிலே!

# டேவிட் பிரவுண்


770-36 BHP
ரூ. 18750/=
(வெளிநாட்டுச் செலவாணி உறுதிப்பத்திரத்துடன்)

880-46 BHP
ரூ. 20500/=
(வெளிநாட்டுச் செலவாணி உறுதிப்பத்திரத்துடன்)



அத்துடன் உறுதியுடன் உருவாக்கப்பட்ட


3முதல்3½தொன் நிறை கொள்ளும்
உயர்த்தக்கூடிய இழுவை வண்டி

GPL-R-T-1

தொடர்பு கொள்ளுங்கள்:
ரோலன்ஸ் (ட்ராக்டர்கள்) லிமிட்டெட்
ரோலன்ஸ் லிமிட்டெட் (துணைக் கம்பெனி) டரட் ரேட் கொழும்பு 7.

HOUSE OF R ROWLANDS


திரித்துக் கூற முற்பட்டுள்ளதாக ஸ்ரீ சங்கராச்சாரியார் கூறியிருக்கிறார்.

பொது மக்களிடையே தமது செல்வாக்கை குறைக்கும் நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்படுவதாக அவர் கூறியிருக்கிறார்.

நேற்றிரவு டில்லிக்கு கிழம்புவதற்கு முன்னர் அவர் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விடுத்தார்.

பசுவதைத் தடை இயக்கத்தைத் தாம் மீண்டும் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ள சமயத்தில் இந்த விஷயங்கள் பற்றி மக்களிடையே பெரிது படுத்த இந்த அக்கறையுள்ள கோஷ்டிகள் விரும்புகின்றன என்று அவர் தம்து அறிக்கையில் கூறியிருக்கிருர்.

ஆகவே, பாட்னுவில் என்ன நடந்தது என்பதைப் பற்றிச் சரியாக விளக்க வேண்டியது அவசியம்:-

தீண்டாமை முற்றிலும் தனிமனிதர்களைப் பொறுத்த விவகாரம் என்று பாட்னுவில் தாம் சொன்னதாக ஸ்ரீ சுவாமிகள் கூறியிருக்கிருர். இதுபற்றி அவர்மேலும் கூறியிருப்பதாவது:-

சில சந்தர்ப்பங்களிலும், சில நேரங்களிலும் நமது சொந்த உறவினர்களே ''தீண்டாதவர்களாக'' கருதப்படுகிருர்கள் என்பது உண்மை. ஹிந்து குடும்பங்களில், தந்தைக்கும் மகனுக்கும் இடையே. அன்னைக்கும் குழந்தைகளுக்கும் இடையே ''தீண்டாமை' இயல்பாகவே அனுசரிக்கப்படுகிறது.

ஆனல் இதற்கும் சமுதாயத்தின் மொத்த விவகாரங்களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது.

ஜாதி முறை என்பது தீண்டாமையிலிருந்து தெளிவாக வேறுபட்டதாகும், ஒரே ஜாதியிலும், ஒரே சமயத்திலும் தீண்டாமை இருக்கிறது. இந்த உரிமையை அனுசரிப்பதை நாம் மறுக்க முடியாது.

உதவியில்லாமலும் நோயுற்றுமுள்ள ஒரு ஹரிஜனனுக்கு எந்த அளவுக்கு வேண்டுமானலும் சேவை செய்யத் தாம் தயாரென்று ஸ்ரீ சங்கராச்சாரியார் கூறியிருக்கிருர்.

'பாட்ன மேடையில் இதைத்தான் நான் அறிவித்தேன்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

சமுதாயத்தில் மிகவும் கீழ் நிலையிலுள்ள மக்களுக்கு சேவை செய்வதற்கு நான் என்றென்றும் தயாராக விருக்கிறேன்.

இந்து சமுதாயத்திலுள்ள மற்றவர்களுக்கும், ஹரிஜனங்களுக்குமிடையே ஒரு வேற்றுமை உணர்ச்சியை நாம் அகற்றவேண்டும்.

இந்து சமுதாயத்தில் அவர்களும் மற்றவர்களும் சமம்என்று கருதவேண்டும்.

அப்போதுதான் இந்தப் பூசல்கள் அனைத்தும் முடிந்து, பிரச்னைகள் அனைத்தும் தீரும்.

தேசியகீதம்பற்றி ஸ்ரீ சங்கராச்சாரியார் பேசியதாக வெளியானது முற்றிலும் தவறு என்று அவர் தமது அறிக்கையில்கூறியுள்ளார்.

இதுபற்றி பாட்ன மகாநாட்டில் நடந்ததாக அவர் தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

வந்தேமாதரம் கீதத்தை பாடுமாறு ஸ்ரீ சுவாமிகள் யோசனை கூறினர். ஜனகணமன கீதத்தைப் பாடுவதற்கு அவாகள் தயாராக இருப்பதாக வரவேற்புக கமிட்டித் தலைவர் அவரிடம் சொன்னர். அதற்குப்பிறகு எதுவுமே பாடாமல் விட்டுவிடுவது நல்லது என்று ஸ்ரீ சங்கராச்சாரியார் கூறினராம்.

கூட்டம் முடிவடைந்ததாக தலைவர் அறிவித்தார் அதற்குப்பிறகு ஸ்ரீ சுவாமிகள் வெளியே போய் விட்டார்.

ஆகவே தாம் வெளிநடப்புச் செய்ததாக பிரச்னையே இல்லையென்று ஸ்ரீ சுவாமிகள் தமது அறிக்கையில் கூறியிருக்கிருர்.

அவர் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு சில காங்கிரஸ் காரர்கள் வற்புறுத்தியதன்பேரில் ஜனகணமன கீதம் பாடப்பட்டது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

## பொருளாளர்

சென்னை, ஏப். 9

திராவிட முன்னேற்றக்கழகத்தின் அடுத்த பொருளாளர் ஒருகலைஞராகவே இருப்பார். இந்தக்கலைஞர் யார் என்பதுதான் இன்னும்தெளிவாகவில்லை. நாடகக் கலைஞரா சினிமா கலைஞரா அல்லது வேறுவகையான கலைஞரா என்பது இன்னும் தெரியவில்லை.

அடுத்த பொருளாளராக ஒரு கலைஞரையே தேடிப்பிடித்திருப்பதாக முதல்வர் திரு. கருணநிதி கூறியுள்ளார், அனேகமாக இவர் மக்கள் திலகமாக இருக்கலாமென்று சோஷ்யம்கூறப்படுகின்றது,

முன்னர் அண்ண கழகத்தின் பொதுச்செயலாளராக இருந்துவந்தார். அப்பதவி எம். ஜி. ஆருக்குப் போகலாம், அல்லது திரு. நெடுஞ்செழியனுக்கு கிடைக்கலாம் என்றுகருதப்பட்டது. ஆனல் முதலமைச்சரே அந்தப் பதவியுலும் இருக்கவேண்டுமென்று எம். ஜி. ஆர். தெரிவித்துள்ளார்.

தற்குக் காரணம் என்று திரு. கே. காமராஜ் கூறினர்.

பழைய கலைமுறை முணுமுணுப்பின்றி ஹிந்தியைக் கற்றது. காந்திஜியின் தலைமையின் கீழ் ஹிந்தி சுதந்திர இந்தியாவின் மொழியாகும் என நம்பி வளர்த்தோம் என்ருர் அவர்.

ஹிந்தியை அரசு பரப்ப வேண்டியிருந்தாலும் விரும்பாத மக்கள்மீது எந்த மொழியையும் திணிக்கலாகாது. இந்தியாவின் ஒற்றுமைக்கு அபாயம் ஏற்படக்கூடாது என்பதை முக்கியமாகக் கவனத்தில் வைக்க வேண்டும் என அவர் எச்சரித்தார். மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியானதும், மொழி, பிராந்தியம் முதலிய பிரச்னைகள் மறையும் என்ருர் திரு. காமராஜ்.

தென்னிந்தியாவில் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருப்பதை வட நாட்டினர் பலர் உணர்வதில்லை என்று அவர் சொன்னர்.

தமிழ் பேசாதவர்களுக்கென டில்லி தமிழ்ச் சங்கம் நடத்தும் ஐந்தாவது பூர்வாங்க வகுப்பு முதலாவது முன்னேறிய வகுப்பு ஆரம்ப விழாவில் இளைஞர்கள்சேவைகள் ஆகியவற்றில் கல்வி மந்திரி டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் கலந்துகொண்டார்.

பல்கலைக்கழக மட்டத்தில் பிராந்திய மொழிகளைப் போதன மொழியாக ஏற்பதால் உயர் கலைக் கல்வியின் தரம் உயரும் என்பதில் தமக்கு ஐயமில்லை என்று மந்திரி திரு. ராவ் கூறினர்.

நாட்டின் ஒரு பகுதியின் மொழியை மற்ற பகுதியில் இருப்போருக்கு கற்பிக்கும் திட்டம் தேசிய ஒருமைப்பாட்டுடன் நேரடி சம்பந்தமுடையதாகும். இந்தியா மும்மொழி நாடாக இருந்தாக வேண்டும். மேற்படிப்பு, விஞ்ஞானம், தொழில் நுட்பம், சர்வ தேசத் தொடர்பு ஆகியவற்றுக்கு ஆங்கிலமும் மற்ற அந்நிய மொழிகளும் தேவைப்படும். ஹிந்தி தொடர்பு மொழியாக விளங்க முடியும். வட இந்தியாவில் வசிப்போர் மற்ற இந்திய மொழிகளில் ஒன்றை குறிப்பாக, தென்னிந்திய மொழிகளில் ஒன்றைக் கற்றுக்கொள்வது நல்லது என்ருர் அவர்.

தமிழ் மிகப் பழமையான ஒரு மொழி. இலக்கிய வகுமும் கலாசார வளமும் மிளந்த மொழி. தமிழுக்கு சர்வதேச அந்தஸ்து உண்டு என்பதைக் கடந்த ஆண்டு சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் பேரவையிலிருந்து புலப்பட்டது, தமிழ்ப் படிப்புக்கள் பற்றிய சர்வதேசக் முடியும் என்பது பற்றி தமிழ் நாட்டு அரசாங்கத்துடன் தாம் விரைவில் ஆலோசனை நடத்தவிருப்பதாக மந்திரி கூறினர்.

இந்த வகுப்பை திரு. காமராஜ் துவக்கி வைப்பது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் கூறினர்.

## கருணநிதி ராஜஸ்தான் போவார்

சென்னை, ஏப். 9


ராஜஸ்தானில் நடைபெறவிருக்கும் அகில இந்தியமதுவிலக்கு மகாநபட்டில் கலந்துகொள்ள முதலமைச்சர் திரு. கருணநிதி போகவிருக்கிருர். வேறுபல பிரமுகர்களும் இந்த மகாநாட்டுக்கு வருகிருர்கள்.

கோட்டை, புதன்.

இலங்கை மட்பாண்டக் கூட்டுத் தாபனத்துக்கு கடந்த வருடத்தில் 18 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது. கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இந்த வருடத்தில் 30 லட்சம் ரூபாய் விற்பனையாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.


ரவி என்றால் ... ... "சரி"


ரவி பிரஷ்களுள் நிலையான பெயர்.
உறுதியற்ற சிலிர்க்கும் முடிகள்
சுவர்களைக் களங்கப் படுத்தும் கோடுகள்
தீந்தையை வீணடித்தல்
இவை ரவி பிரஷ்களில் இல்லை.

ரவி பிரஷ் வாங்கும் போது நீங்கள் பூரண நம்பிக்கை அடையலாம். காரணம் ரவி தீந்தை பிரஷ்கள் இறக்குமதி செய்யப்பட்ட சுத்தமான முடிகளைக் கொண்டு செய்து அவற்றின் தரமும் நீண்ட சேவையும் உறுதிப்படுத்தும் விதம் பரிசோதிக்கப் படுகின்றன.

நீங்கள் அடுத்த முறை தீந்தை பிரஷ்கள் வாங்கும் போது பிடியில் ரவி என்ற பெயர் இருக்கிறதா எனப்பார்த்து வாங்குங்கள்.
அதுவே தரத்தின் உத்தரவாதம்

சகல தேவைக்கும் ஒரு ரவி பிரஷ் உண்டு.

இவற்றின் வகைகளைக் காண்பிக்க உங்கள் வியாபாரியைக் கேளுங்கள்.
ரவி இன்டஸ்ரீஸ் லிமிடெட்

RI-2-68-MASTERS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒரு கொலையாளிக்கு முன் அஹிம்சையைக் கடைப்பிடித்த ஒருவன் நின்றால் சாவது நிச்சயம் தான். ஆனால் அதற்குத்தான் அஹிம்சை என்று பெயர். அந்த சோதனையிலும் பின் வாங்காமல் இருந்தாலேதான் அஹிம்சையாகும்.

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 28-ந்திகதி (10-4 69)


## ஏமாற்றம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதினோராவது மாநில மாநாடு கோலாகலமாக நடந்துமுடிவடைந்திருக்கிறது. இந்த மகாநாட்டில் உரைநிகழ்த்திய அனைவரும் சரி, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் சரி கடந்த காலத்தில் குறிப்பாக சென்ற நான்கு ஆண்டுகளாக அரசாங்கத்துடன் சேர்ந்து உதவியும் ஒத்துழைப்பும் அளித்து வந்ததிலும் சரி முடிவில் கிடைத்தது ஏமாற்றமே என்ற தொனியிலேயே அமைந்திருந்தன். 1965-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் பின் திரு. டட்லி சேனநாயகாவுக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளித்து தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு மூலகாரணமாக இருந்த தமிழரசுக் கட்சியினர் சில மாதங்களுக்கு முன்னர் அரசாங்கத்துக்கு அளித்துவந்த பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் விலக்கிக்கொண்டு நிபந்தனையுடனான ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கத் தீர்மானித்தனர். இப்பொழுது நிபந்தனையுடனான ஆதரவையும் ஒத்துழைப்பையும் கூட விலக்கிக்கொள்ள இம் மகாநாட்டில் முடிவுசெய்திருக்கின்றனர். இந்த முடிவு பற்றி நாளை நாம் இங்கு விரிவாக ஆராய்வாம்.

1956-ம் ஆண்டிலிருந்து இலங்கைத் தமிழ் மக்களின் ஆதரவை பெருமளவில் பெற்றிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு பொறுப்பும் கடமையும் நிறைய இருக்கிறது. இக்கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றிருக்கும் திரு. இராசமாணிக்கம் அரசியலில் ஆற்றலும் அனுபவமும் நிறைந்தவர். நிதானப் போக்குமுடையவர். அவர் இந்த

பின் நடைபெற்றுள்ள சம்பவங்களையும் தமிழரசுக் கட்சியின் கடந்த-கால வரலாறு பற்றியும் விரிவாக விளக்கிக் கூறியிருக்கிறார். அவருடைய தலைமையுரையில் தெரிவிக்கப்பட்ட அத்தனை விஷயங்களும் சுருங்கச்சொன்னால் அதுவும் அவர் பாஷையிலேயே சொல்வதானால் இந்த அரசியல் அமைப்பை மாற்றியே தீரவேண்டும். இந்த மாற்றத்துக்கு நாம் தீவிரமாகப்போராட வேண்டிய கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது தான்.

தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை இங்கு சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவதுதான். பல இன பல மொழி பேசும் மக்கள் தங்கள் மொழி, கலை, கலாச்சாரத்தைப்பாதுகாப்பதற்கு சமஷ்டி ஆட்சி அமைப்பே சிறந்ததென்பது என்று பல நாடுகளைச்சான்றுகாட்டி அவர்கள் ஆதாரத்துடன் கூறுகிறார்கள் சமஷ்டி ஆட்சிஅமைப்புஇங்கு கூடாதென்று சொல்ல முடியாது. ஆனால் சமஷ்டி ஆட்சி அமைப்பு முறை பற்றி இங்கு தவறான அபிப்பிராயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும் என்பதில் பெரும் பான்மைச் சமூகத்தவர்களுக்கிடையிலும் ஒத்த கருத்து நிலவுகிறது. ஆனால் எந்த விதமான முறையில் புதிய அரசியல் அமைப்பு இருக்க வேண்டுமென்பதில்தான் கருத்து வேற்றுமை நிலவுகிறது. இந்நிலையில் அரசியல் அமைப்பை மாற்றி சமஷ்டி ஆட்சி அமைப்பை உருவாக்குவதில்பெரும்பான்மைச் சமூகத்தினரின் உதவியையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதில்தான் தமிழரசாரின் வெற்றியும் ராஜதந்திரமும் தங்கியிருக்கி

# தமிழர்கள் தமக்குள்ளிருக்கும் பிளவுகளை முதலில் நீக்கவேண்டும்

## தமிழரசு மாநாட்டில் ம. பொ. சி. சொற்பொழிவு

"தமிழர்கள் தங்களின் உரிமைகளை பிறர் தர மறுக்கிறார்கள் என்று கூறும் பொழுது நமக்குள்ளிருக்கும் பிளவுகளையும், உயர்வு தாழ்வுகளையும் நீக்கிக் கொள்ள முன்வரவேண்டும். கடமைக்காக இல்லாவிட்டாலும் உரிமை என்ற உறவுக்காகவாவது தமிழர்கள் தமக்குள் இருக்கும் தீண்டாமையை ஒழிக்க வேண்டும்"

இந்தக் கருத்தை தமிழ்நாடு தமிழரசுக் கழக தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார் நேற்று முன்தினம் கூறினார். தமிழரசுக்கட்சியின் இலக்கிய மகாநாட்டில் திரு. ம. பொ. சி. சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்தினார். அச் சொற்பொழிவை நமது காரியாலய நிருபர் எஸ். திருச்செல்வம் இங்கு தொகுத்தளிக்கின்றார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கைக்குவந்திருப்பதிலும், உங்களைப் பார்ப்பதிலும், உங்கள் மத்தியில் பேசுவதிலும் நான் மட்டற்ற மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் இங்கு வரவும், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும், என்னை அனுமதித்து, எனக்கு விஸா கொடுதத இலங்கை அரசாங்கத்துக்கு நான் முதலில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். பலதடவை நான் இங்கு வந்திருந்தாலும், பல விழாக்களில்கலந்துகொண்டு பேசியிருந்தாலும், இது போன்ற ஜனத்திரளை- மக்கள் கூட்டத்தை நான் கண்டதில்லை. இதற்கெல்லாம் காரணம் இலங்கைத் தமிழ் மக்களின் ஏகபோக செல்வாக்குப்பெற்ற கட்சியான தமிழரசுக்கட்சியின் மாநாடாக இப்பெருவிழா இருப்பதுதான்.

எனது தலைமையில் இந்தியாவில் இயங்கிவரும் தமிழரசுக்கழகத்துக்கும். இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குமிடையில் 'தமிழரசு' என்பதிலேயே ஒற்றுமை உண்டு. கொள்கையிலும் சிறிது ஒற்றுமை உண்டு. தமிழர்கள் இந்தப் பரந்த உலகில்எங்கு வாழ்ந்தாலும்: அவர்கள் வாழ்வில் எதிலும் தமிழ் முதல்இடம் பெறவேண்டும் என்பதே எனது கழகத்தின் கொள்கையாகும். தமிழர்கள் எந்தநாட்டில், எந்த ஆட்சியில்; எந்தச்சூழ்நிலையில் வாழ்ந்தாலும் அவர்கள் வாழ்வில் தமிழ் முதலிடம் பெற்றே தீரவேண்டும்.

கல்தோன்றிமண்தோன்றாக்காலத்தே தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி என்பார்கள். வாளோடு முதல் தோன்றிய முதல் குடியின் முதல் மொழியான தமிழ்

பது பயங்கரமானது. ஆனால் ஒன்றைமட்டும் நான் இங்கு கூற விரும்புகின்றேன்,

இலங்கை நூல்களை இந்தியாவில் வாசிக்க அதன் நடை, சொற்கள் சற்று விளங்காமல் இருக்கின்றன. இதில் இருபகுதியாரும் கூடிப்பேசி ஒருமைப்பாட்டுக்கு வரவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

எந்த ஒரு பெரும்பான்மை இனமும், சிறுபான்மை இனத்திடம் தனது மொழியைத் திணிக்க எத்தனிப்பது ஏகாதிபத்தியமானதாகும். மொழியால், கலையால், கலாசாரத்தால் நாம் ஒரேஇனமாக இருந்தாலும் நான் இந்தியன். நீங்கள் இலங்கையர்கள். எமக்குள்ளே, ஆட்சி, அரசியல், நீதியெல்லாம் வெவ்வேறானது. பூரண, புனிதமான, தமிழகத்தில் நான் வாழுகின்றேன் என்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இது எனக்குப் பெருமையைத் தருகின்றது.

### 'மட்ராஸ் காரன்'

இதனைப் பெற்றுக்கொடுத்த அறிஞர் அண்ணாவை தமிழ்கூறும் நல்லுலகம் மறந்துவிடமுடியாது; எந்த ஆணவம் கொண்ட, படைப்பலம் கொண்ட ஆட்சிதான் வந்தாலும்இனி எங்களை 'மட்ராஸ்காரன்' என அழைக்க முடியாது. தமிழ்நாடு என்ற பெயரை மாற்றவே முடியாது. என் தலைமுறையிலேயே வந்தது. இதைவிடவா ஒரு மந்திரிப் பதவி பெரியது. (மேடையிலிருந்த முன்னாள் அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்தைப் பார்த்து சிரித்துக் கொண்டு இவ்வாறு சொன்னார்.)

தமிழனுடைய ஆதித்தமிழ் சைவம். சுகத்தமிழ்சைவம்.

யாவில் தான் பிரபல்யம் வாய்ந்தவர்கள் என்பதை இங்கு எடுத்துக் கூறுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எதற்கும் நான், முதலில் அடங்கியும் கடக்கத்தான் வேண்டும். அடங்கத் தெரிந்தால்தான் அடக்கவும் முடியும் இன்று நாம் போராடும் உரிமையின் முடிவே உறவுதான். இதனைத்தான் முடிவில் எந்த ஆட்சியாளர்களும் உணரவேண்டும்.

தமிழர்களுக்குள்ளேயே உயர்வு, தாழ்வு இருக்கும் வரை நாம் உரிமைகளைப் பெறமுடியாது. எமது உரிமைகளைத் தர வேறுயாராவது மறுக்கிறார்கள் என்று நாம் கூறவே முடியாது. எமக்குள்ளே உள்ள பிளவை முதலில் நீக்கவேண்டும். இதனைக் கண்டுபிடித்தவர் மகாத்மா காந்தி அடிகள் தான் கடமைக்காக இல்லாவிடினும், உரிமை என்ற உறவுக்காவது தமிழர்கள் தீண்டாமையை ஒழிக்க வேண்டும்.

### நான் ஒரு தமிழ்ப் பாதிரி

நான் கடலுக்கு அப்பால் ஒரு தீவிரமான ஒரு அரசியல் வாதி. ஆனால் இங்கும் எட்டுத் திக்கும் ஒரு கலாச்சார வாதி. தமிழினத்தின் உரிமையைக் காக்க எங்கும் செல்லத் தயாராக இருக்கும் ஒரு காவல்வாதி. நான் ஒரு தமிழ்ப் பாதிரி. அப்படி நினைத்தே டட்லி சேனநாயக்கா என்னை இங்கு வர அனுமதித்தார்கள்.

தமிழகமாநில போராட்டம் தொடங்க இன்னமும் சில மாதங்களே இருக்கின்றன. அது நிச்சயம் வெற்றியையே கொடுக்கும். உங்களுக்கு இங்கிருந்து என்னால் எதுவுமேசெய்ய முடியாது. உங்கள் எந்தப் போராட்

### உடுப்பிட்டியில் புத்தாண்டு விழா

உடுப்பிட்டி புதன்

உடுப்பிட்டித் தொகுதியில் புத்தாண்டு விழா கோலாகலமாகக்கொண்டாடப்படவிருக்கின்றது. கரவெட்டியில் நடைபெறவிருக்கும் இப் புத்தாண்டு விழா உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம்.பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும்.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் போர்த் தேங்காய் உடைத்தல், சங்கீதக்கதிரை சமநிலைஓட்டம், பாலர் இனிப்புபொறுக்கல் வழுக்கும் கம்பத்தில் பணமுடிப்பு எடுத்தல், முட்டி உடைத்தல் கயிறிழுத்தல் விநோத உடைப்போட்டி 25 மைல் சைக்கிள்-ஓட்டப் போட்டிகளும் கரவை வெல்லன் வெளியில் மாட்டு வண்டிச் சவாரிப் போடடியும் நடாத்தப்படும்.

## மேலும் அவகாசம்

யாழ்ப்பாணம், புதன்

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் வரி மதிப்பீடு மிகவும் கூடுதலாகமதிக்கப்பட்டிருப்பதால், இதனைப்பரிசிலனை செய்து நியாயமான முறையில் வரி குறைக்கப்படுமென முதல்வர் உறுதியளித்துள்ளார் எனினும் மாநகர சபைச் சட்டத்தைத் தெரியாத எத்தனையோ வரியிறுப்பாளர்கள் தங்களது ஆட்சேபனையைத் தெரிவிக்காதிருக்கிறார்கள். ஆகவே இப்போது கொடுக்கப்பட்டுள்ள 30 நாள் தவணையை மேலும் ஒரு மாதகாலத்துக்கு பின்போடுமாறு கோரும் பிரேரணை யொன்றை கொட்டடி வட்டார அங்கத்தவர் திரு கே. வி. தெய்வேந்திரன் யாழ். மாநகரசபையின் அடுத்த கூட்டத்தில் கொண்டுவரவிருக்கிறார்.

இதற்கான முன்னறிவித்தலை அவர் கொடுத்துள்ளார். (ந. நி)

## ஆலயங்கள் திறக்கப்படும்

## நாட்டிலும் நகரிலும்

சிலம்புச் செல்வர்திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் சில வருடங்களுக்கு முன்பு ஈழநாட்டுக்கு விஜயம் செய்தபோது யாழ்ப்பாணத்தில் ஓர் அன்பருடைய வீட்டில் தங்கியிருந்தார். மத்தியான போஜனத்திற்கு நேரமானதும் வீட்டுக்காரர் வந்து 'நாங்கள் சாப்பிடுவோமா?! என்று கேட்டார் கிராமணியார் அவர்கள் இந்தக் கேள்வியின் அர்த்தத்தைச் சரியாக விளங்கிக்கொள்ளாமல் 'ஆஹா, தாராளமாக சாப்பிடலாம்' என்று கூறிவிட்டு பேசாமல் உட்கார்ந்திருந்தார். சிறிது நேரம் போக வீட்டுக்காரர் வந்து 'ஏன் நீங்கள்' வரவில்லை?' என்று கேட்டார்.

அப்பொழுதுதான் சிலம்பு செல்வருக்கு விஷயம் புரிநதது. 'நாங்கள்' என்று சொல்லும் போது அந்த யாழ்ப்பாணத்தவர் தம்மையும் தமது குடுப்பத்தாரையுமே குறிப்பிட்டாரே தவிர தம்மையும் சேர்த்துக் கொள்ளவில்லை என்றே அவா முதலில் விளங்கிக் கொண்டார். இரண்டாவது முறையாக அவர் அழைத்தபோதுதான் தம்மையும் 'நாங்கள்' என்ற சொல்லில் உள்ளிட்டு அழைத்திருக்கிறார் என்பது புலனாகியது.

தமிழரசுக் கட்சி இலக்கிய மகாநாட்டில் ம. பொ. சி. இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டு, ஈழத்தமிழுக்கும் இந்தியத் தமிழுக்கும் மொழிமயக்கம் இருக்கிறதென்றும் ஈழத்து இலக்கிய படைப்புகளுக்கு தமிழகத்தில் வரவேற்பு கிடைககாதமைக்கு இதுவும் ஒரு காரணமாயிருக்குமென்றுசொன்னார்.

ஈழத்தில் வெளியாகும் பத்திரிகைகளையும் இங்கு வெளியாகும் சிறந்த எழுத்தாளர்களின் நூல்களையும் தமிழ் நாட்டவர்கள் அக்கறைகொண்டு வாங்கிப் படிப்பதில்லை என்ற ஒரு குறை பலகாலமாக நிலவி வருகின்றது, இதற்கு ம. பொ.சி அவர்கள் கூறிய மொழிமயக்கமும் ஒரு காரணமாயிருக்கலாம். ஆனால் அதையும்விட முக்கியமான காரணங்கள் இருக்கின்றன.

தமிழில் சிறு கதைகள் நாவல்கள், கட்டுரைகள் முதலிய வசனநடை இலக்கியம் தமிழ் நாட்டிலே

இங்கே வழக்கில் இல்லாத பல புதிய சொற்களும் சொற் பிரயோகங்களும் அவற்றில் காணப்பட்ட போதிலும் இலக்கியப் பசிகொண்டவாசகர்கள் வேறு வழியில்லாமல் அவற்றைப் படித்து அந்தப் பசியைத் தணித்தார்கள். மொழி மயக்கம் இவர்களுக்கும் ஏற்பட்டதுதான் ஆனால் திரும்பத் திரும்ப அவற்றை வாசித்து வாசித்து புரிந்து கொள்ளப் பழகிக்கொண்டார்கள்.

ஈழப் படைப்புகளுக்கு தமிழ்நாட்டில் மதிப்பும் கௌரவமும் கிடைக்காமல் இருப்பதற்கு இலங்கை அரசாங்கத்தையோ இந்திய அரசாங்கத்தையோ குறை கூறி பயனில்லை. அவர்களால் என்னசெய்யமுடியும் தமிழ்நாட்டில் ஏராளமான வெளியீடுகள் இருக்கின்றன. அவற்றை படிப்பதற்கே அங்குள்ளவர்களுக்கு நேரமும் வசதியும் இருக்காது அன்றியும் அங்குள்ள பத்திரிகைகள் ஒரு வரைவிலக்கணத்தை தமிழ் மக்கள் எல்லோருக்குமே வகுத்துக் கொடுத்துவிட்டன. அந்த அளவு கோலைக்கொண்டே வேறு படைப்புக்களையும் மதிப்பிடுவார்கள்.

ஆகையால் நமதுபடைப்புகளுக்கு அங்குகிராக்கி ஏற்படுத்த வேண்டுமானால் அவர்களுடைய தரத்துக்கும் மேலாக சிருஷ்டிக்க வேண்டும்.

இங்கிலாந்தில் வெளியான ஆங்கில பத்திரிகைகள், நூல்களுக்கும் அமெரிக்காவில் வெளியானவற்றிற்கும் இத்தகைய போராட்டம் நடந்தது. சிறிதுசிறிதாக அமெரிக்க எழுத்தாளர்கள் தங்களுக்கென ஒரு மதிப்பையும் வாசகர் உலகத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். இன்றும் இங்கிலாந்தில் வெளியாகும் சினிமாப் படங்களை விட அமெரிக்க படங்களுக்கே அதிக செல்வாக்கு உலகம் முழுதிலும் ஏற்பட்டிருக்கிறது.

நமது எழுத்தாளர்கள் முறுனேறி தமிழ் நாட்டு மார்க்கட்டையும் கைப்பற்ற வேண்டுமானால் சிறந்த உன்னதமான இலக்கியங்களை கிருஷ்டிக்க வேண்டும். நிச்சயமாக அங்கே வரவேற்பு கிடைக்கும் ஆனால் ம பொ.சி. கூறியது போல மிகப் பெரும்பாலானதமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றிருக்கும் திரு. இராசமாணிக்கம் அரசியலில் ஆற்றலும் அனுபவமும்நிறைந்தவர். நிதானப் போக்குமுடையவர். அவர் இந்த மகாநாட்டில் நிகழ்த்திய தலைமைப் பேருரையில் பல முக்கிய விஷயங்களைக் குறிப்பிட்டிருந்தார். மாவட்டசபைகள் அமைக்கப்பட்டிருந்தால் தமிழ்மக்களின் நிலை மேம்பாடடைந்திருக்குமென்றும் மாவட்டசபைகளை அமைப்பதற்குப் பிரதமரும் மற்றும் அமைச்சர்களும் மனப்பூர்வமாக முயற்சி செய்தார்கள் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

திறைசேரி கடைசியாக வெளியிட்ட சுற்றறிக்கைவடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களத்துடன் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்குவதாக இருக்கிறதென்றும் கூறியிருக்கும் திரு. இராசமாணிக்கம் இலங்கை சுதந்திரமடைந்த

...பான்மைச் சமூகத்தினரின் உதவியையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதில்தான் தமிழரசாரின் வெற்றியும் ராஜதந்திரமும் தங்கியிருக்கிறது.

"கஷ்டம் மிகுந்த காலம் எம்மை எதிர்நோக்கியிருக்கிறது இந்தநோக்கத்தில்நாம் கட்டி வளர்த்த ஒற்றுமையைச் சிதைய விடாது மேலும் பலப்படுத்தி உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற வகையில் இனத்தை வளப்படுத்தி ஒரு புத்துயிர் பெற்ற தமிழினத்தை உரிமை பெற்ற தமிழகத்தை காண்போம் வாரீர்'' என்று தமிழ் பேசும் மக்களுக்கு திரு இராசமாணிக்கம் அழைப்பு விடுத்திருக்கிருர். இந்த அழைப்பு மட்டும் போதாது. மக்களை யல்ல தலைவர்களையும் ஒன்று படுத்துவதில்தான் அவரது வெற்றி பெரிதும் தங்கியிருக்கிறது.

# 'திருமலையில் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்

திருமலையில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவவேண்டுமெனவும், தமிழ் நூல்களை வெளியிட கல்வி கலாச்சார அமைச்சுத் தவறியமையால் ஒரு தேசிய நிறுவகத்தை நிறுவ வேண்டுமெனவும் இரு தீர்மானங்கள் நேற்றிரவு தமிழரசு இலக்கிய மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டு பிரகடனம் செய்யப்பட்டது.

இரு தீர்மானங்களின் விபரமும் பின்வருமாறு:-

(1) பேராதனையில்தேசிய மொழிகள் இரண்டிலும் கல்வியூட்டும் தேசியப் பல்கலைக் கழகம் ஒன்றும், தலைநகராகிய கொழும்பில் தேசிய மொழிகள் இரண்டையும் பேசுவோருக்குச் சேவை செய்யும் பல்கலைக் கழகம் ஒன்றும், சிங்களம் பேசும் மக்களின் கலாச்சாரக் கல்வித் தேவைகளை நிறைவேற்றும் வித்தியோதய, வித்தியாலங்கார என்னும் இரு பல்கலைக் கழகங்களும் இருப்பதால், தமிழ் பேசும் மக்களின் மொழி கலாசாரம் என்பவற்றைப் பாதுகாத்துப் பேணிவளர்ப்பதற்கும், அவர்களுடைய கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், திருமலையில் ஒரு பல்கலைக்கழகத்தை உடனே நிறுவுவது இன்றியமையாததெனவும் இப் 11-வது மாநில மாநாடு பிரகடனம் செய்து, இந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவ உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென வற்புறுத்துகிறது.''

(2) தமிழில் சிறந்த இலக்கிய வகைகளை ஆக்குவதற்கு வேண்டிய ஊக்கத்தையும் ஆக்கத்தையும் கொடுப்பதற்கு கல்வி கலாசார அமைச்சு முற்று முழுதாகத் தவறியமையால் இதற்காக ஒரு தேசிய நிறுவகத்தை நிறுவ வேண்டுமென இந்த மாநில மாநாடு முடிவு செய்து அதனை றுவுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு செயற் குழுவைப் பணிக்கிறது. (கா. நி)

## 23 குடும்பங்களுக்குக் காணி

வல்வெட்டித்துறை, புதன்

தும்பளை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, தொண்டமானாறு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நிலம், வீடு அற்ற 23 குடும்பங்களுக்கு கற்கோவளம் பொதுக் குடியேற்றத் திட்டத்தில் பருத்தித்துறை காரியாதிகாரியினுல் காணிகள் கையளிக்கப்பட்டிருக்கிறது பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் இதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள [illegible] 1969-ம் ஆண்டு ஏப்ரல் [illegible] வெளியிடப்பட்டது.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி என்பார்கள். வாளோடு முதல் தோன்றிய முதல் குடியின் முதல் மொழியான தமிழ் மொழி. தமிழனின் வாழ்விலேயே இன்னமும் முதலிடம் பெறவில்லை, நினைக்க நினைக்க வேதனையும் வெட்கமும்தான் ஏற்படுகின்றது. உலகில் எந்தநாட்டிலும், எந்த இனத்துக்குமே இந்தநிலை இல்லை.

## தமிழ் இலக்கணம்

தமிழுக்கு இலக்கணம் தனித்தன்மை வாய்ந்தது. வேறெந்த மொழிக்குமே இந்தத்தனித்தன்மைஇல்லை. எழுத்ததிகாரத்தில் தொடங்சி, சொல் அதிகாரத்தில் வளர்ந்து, பொருள் அதிகாரத்தில் முடிகிறது தமிழ் இலக்கணம்.

மனிதருள் எப்படி வாழலாம் என்பது ஒரு நியதி. இப்படித்தான் வாழவேண்டும் என்பது ஒரு நீதி; இதுதான் தமிழன்நீதி. தமிழன் வாழ்வு தமிழ் இலக்கணத்தோடு சேர்ந்தது. நாம் அப்படி வாழுகின்ருேமா? இல்லை. அதற்குத்தானே நாம் முயன்றுகொண்டிருக்கின்ருேம், உலகம் எம்மை விடுகின்றதில்லை என்பது தான் அந்த உண்மை.

இலங்கை சிங்களநாடு என்றும், சிங்களத்தீவு என்றும் இந்தியக் கவிஞர்கள் பாடுவதை நிறுத்தவேண்டுமென இந்த மேடையில் மட்டுநகர் எம். பி. திரு. இராசதுரை பேசும்போது வேண்டுகோள் விடுத்திருந்தார். எங்கள் நாட்டில், எங்கள் இடத்துக்கே எமது தமிழ்ப் பெயரை வைக்க எம்மால் முடியாத ஒருநிலையில் நாம் இருக்கிருேம். அடிமைப்பட்ட காலத்தில், அடிமைப்பட்ட புத்தியில் நாம் வேறு எப்படி அழைப்போம். பெரியபுராணம், சிலப்பதிகாரம், மணிமேகலைபோன்ற பல நூல்களிலும் இலங்கை 'ஈழம்' என்றே குறிப்பிடப்படுகின்றது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

## இலங்கை நூல்கள்

இலங்கை நூல்களை இந்தியாவில் கொண்டுசெல்ல அரசாங்கம் தடைவிதிப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென திரு. கனகசெந்திநாதன் இங்கு பேசியதையும் நான் சிந்திக்கவேண்டியவனுக இருக்கிறேன். ஆனுல் அதனை நாம் ங்கு விவாதிக்கக்கூடாது. ஏனென்ருல் என்னை அரசியல்வாதியாக இல்லாமல் ஒரு கலாச்சாரவாதியாகவே டட்லி அரசாங்கம் இங்குவர [illegible]

சர் திரு. எம். திருச்செல்வத்தைப் பார்த்து சிரித்துக் கொண்டு இவ்வாறு சொன்ஞர்.)

தமிழனுடைய ஆதித்தமிழ் சைவம். சுகத்தமிழ்சைவம். அதனுல்தான் சைவமும், தமிழும் தழைத்தோங்க வேண்டுமென அக்காலத்திலேயே பாடிஞர்கள். தமிழில் விருத்தப்பா பாடியிருக்காவிட்டாம் பாமரமக்களை கவர்ந்து இழுக்கும் தமிழ் உணர்வு தமிழில் இல்லாது போயிருக்கும்.

இன ஒருமைப்பாடுதான் க்லையைக் காக்கும். இதனுல்தான் கலாச்சாரவாரியாக இங்கு வந்தநான் இனஒருமைப்பாடுபற்றி இங்குகுறிப்பிடுகின்றேன்.

## இனத்தால் ஒருமை

மதத்தால் எமக்குள்பிளவு இருந்தாலும் தமிழன் என்ற இனத்தால் நாம் ஒன்றுபட்டவர்கள். மென்மையான உதடுகளில் கொஞ்சி விளையாடும் ஒரு மொழிதான். தமிழன்தனது மொழியுரிமை, கலாச்சார உரிமையைப் பெறுவதற்கு முன்னர், தனது அரசியல் உரிமையைப் பெறவேண்டும். இலங்கைத் தமிழர்களின் அரசியலுரிமைக்காகவும், இன விடுதலைக்காகவும் தானே தந்தை செல்வநாயகம் அவர்கள் இந்தத் தள்ளாத வயதிலும் இங்கு வந்தும், உழைத்துக் கொண்டுமிருக்கின்ருர்.

இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்குமிடையே பரம்பரையான தொடர்பு இருந்து வருகின்றது. இதைக் காப்பியங்கள், இதிகாசங்கள், புராணங்கள் மூலமே காணக்கூடியதாக இருக்கின்றது. சிங்களத் தலைவர்களையும், ஆட்சியாளர்களையும் சந்திக்க நேர்ந்தால் எமக்குள்ள பரஸ்பரமான தொடர்பு பற்றி நான் எடுத்துக் கூறுவேன். இலங்கைத் தமிழர்களும், இங்குள்ள சிங்கள மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டிய அவசியம் பற்றியும் நான் வலியுறுத்துவேன்.

## இலங்கைத் தலைவர்கள்

இந்தியத் தமிழர்களை இலங்கைக்கு அழைப்பது போல, இலங்கைத் தமிழர்களை இந்தியாவுக்கு அழைப்பதில்லையென இங்கு ஒரு தப்பான கருத்து நிலவி வருகின்றது. காலஞ்சென்ற நடேசபிள்ளை இந்தியாவில் நடந்த ஒரு தமில விழாவுக்குத் தலைமை வகித்தார். பண்டிதர் கா. பொ. இரத்தினம் இந்தியாவில் பேசாத இடமே இல்லை. யாழ்ப்பாணத்து நாவலர், கதிரவேற்பிள்ளை ஆகியோர் [illegible] இலங்கையில் [illegible] பாக்க [illegible]

[illegible] சில மாதங்களே இருக்கின்றன. அது நிச்சயம் வெற்றியையே கொடுக்கும். உங்களுக்கு இங்கிருந்து என்னுல் எதுவுமேசெய்ய முடியாது. உங்கள் எந்தப் போராட்டத்துககும், கடலுக்கு அப்பால் இருந்து நான் உதவி செய்வேன் என்பதை உறுயாகக் கூறுகின்றேன்.

இறுதியாக இரு விஷயங்களை உங்களுக்கு எடுத்து கூறவிரும்புகின்றேன்.

ஒரே நாட்டு மக்கள் என்பதற்காக சிங்கள மக்களுடன் ஒன்றுபட்டு வாழுங்கள்.

தமிழ், தமிழர் வாழும் இடமெல்லாம் முதலிடம் வகிக்க ஒன்று படுங்கள்.

இதன் பின்னரே இலங்கையும், இந்தியாவும் சுதந்திரமுள்ள நாடுகளாக இணைய முடியும், (கா. நி)

## தவறியபொருள் கிடைத்தன

உடுப்பிட்டி. புதன்

கனகம்புளியடியிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த பஸ்ஸில் தனது பொருட்களைத் தவறவிட்டவர் மறுநாள் கோண்டாவில் இ.போ.ச டிப்போவில் தனது தவறிய பொருட்களை மீட்டார். கரணவாய் தெற்கைச் சேர்ந்த கார்த்திகேசு வல்லிபுரம் என்பவரே இந்த அனுபவத்துக்குள்ளாஞர்.

அவர் தவறவிட்டிருந்த 4 அரிசிக் கூப்பன்கள் பிறப்புச்சாட்சிப்பத்திரம், சான்றுப்பத்திரங்கள் முதலியவை அடங்கிய பையைப் பஸ்ஸில் கண்டெடுத்த பஸ் காப்பாளர் திரு க. கந்தசாமி டிப்போவில் ஒப்படைத்திருந்தார்.

......

பாகிஸ்தானில்

## 3 மாணவருக்கு சிறைத்தண்டனை

கராச்சி, ஏப்9.

பாகிஸ்தானில் மாணவர் தலைவர்கள் மூவருக்கு ராணுவ நீதிமன்றம் ஒரு வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்திருக்கின்றது. இவர்களில் ஒருவர் மாணவர் கிளர்ச்சிகளுக்கு மிகவும் முக்கியஸ்தராய் இருந்தவர். தடைகளை மீறி கூட்டம் நடத்த எத்தனித்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. துப்பாக்கிகளை ஒப்படைக்காமல் வைத்திருந்த 7 பேருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இதுவரை 50 [illegible] பட்டுள்ளன.

[illegible] தலை அவர் கொடுத்துள்ளார். (ந. நி)

## ஆலயங்கள் திறக்கப்படும்

திருவனந்தபுரம், ஏப். 8

கேரளத்தில் ஹரிஜனர்களுக்கு மேலும் பல ஆலயங்கள் திறந்து விடப்படவிருக்கின்றன.

காந்தி நூற்ருண்டு விழாவையொட்டியே இவ்வித ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## வடமராட்சியில் புகையிலை பாதிப்பு

பருத்தித்துறை, செவ்.

அண்மையில் ஏற்பட்ட மழைகாரணமாக வடமராட்சிப் பகுதியிலுள்ள புகையிலைச் செய்கைக் கமக்காரர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மழைக்கு முன் புகையிலை வெட்டியவர்கள் பெரும் இலாபம் பெறுவார்களென்றும். மழைக்குப்பின் வெட்டியவர்கள் நஷ்டமடைவார்களென்றும் தெரிகிறது,

## ஆண்டுவிழா

சுழிபுரம், புதன்

சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் இம்மாத பிற்பகுதியில் கழகத்தின் ஆண்டுவிழா கொண்டாடுகின்றனர்.

...ணமாயிருக்கலாம். ஆனுல் அதையும்விட முக்கியமான காரணங்கள் இருக்கின்றன.

தமிழில் சிறு கதைகள் நாவல்கள், கட்டுரைகள் முதலிய வசனநடை இலக்கியம் தமிழ் நாட்டிலே தோன்றி ஈழத்தையும் ஆட்கொண்டன. ஈழத்தில் உள்ளவர்கள் பல ஆண்டுகளாக தமிழ்நாட்டு சஞ்சிகைகளையும் கதைகளையும் வாசித்து பழக்கப்பட்டவர்கள்.

சிறந்த உன்னதமான இலக்கியங்களை கிருஷ்டிக்க வேண்டும். நிச்சயமாக அங்கே வரவேற்பு கிடைக்கும் ஆனுல் ம. பொ. சி. கூறியது போல மிகப் பெரும்பாலான தமிழ் மக்கள்படித்துபுரிந்துகொள்ளக்கூடிய தமிழ்நடையில் எழுதுவதற்கு இருநாட்டவருக்குமிடையில் ஒருமைப்பாடு அவசியம்.

—வழிப்போக்கன்.

# அராலியில் கைக்குண்டு கைப்பற்றப்பட்டது

நல்லூர், புதன்

பன்றித்தலைச்சி அம்மன் ஆலய கைக்குண்டு வீச்சு சம்பவத்தைத் தொடர்ந்து கைக்குண்டுவைத்திருப்பவர்களைத் தேடிவந்த வட பகுதிப்பொலிஸார் நேற்று முன்தினம் நள்ளிரவு அராலி மேற்கில் ஒரு வீட்டில் இரு கைக்குண்டுகளைக்கைப்பற்றினர்.

சங்கானைப் பொலிஸ் சார்ஜண்ட் திரு. லண்ட்ரா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியே இவ்வீட்டை முற்றுகையிட்டு இவற்றைக் கைப்பற்றியது.

இது சம்பந்தமாக சின்னவன் பற்குணம் அல்லது காத்தி என அழைக்கப்படும் ஒருவர் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது மாஜிஸ்திரேட் இவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சுப்ரீம் நீதிமன்ற உத்தரவின் பின்னரே இவ்விதம் கைதுசெய்யப்பட்ட ஒருவர் பிணையில் விடுதலை செய்ய வேண்டுமென்றும் வடபகுதி பொலிஸ் சுப்ரீண்டன் அண்மையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலால் கேட்கப்பட்டிருந்ததும் இதனை பொலிஸ் சுப்ரீண்டன் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்திருந்தது தெரிந்ததே.

பொலிஸார் இது சம்பந்தமாக தொடர்ந்து புலன் விசாரணையிலீடுபட்டுள்ளனர்.


# 4-வது ஜாதிக சம்பத சீட்டிழுப்பு

9ல் இருந்து 18 வரையிலான பரிசுபெற்ற ரிக்கற் இலக்கங்கள் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 09 G 000554 | 02 J 000355 | 07 K 000923 |
| 02 L 000877 | 14 L 001937 | 07 M 000170 |
| 03 P 000205 | 10 U 000274 | 02 V 001076 |
| | 02 Z 000295 | |

இவற்றிற்கு ரொக்கப்பரிசுக்குப் பதிலாகக் கிடைக்கவிருக்கும் "லான்மாஸ்டர் 150'' 2 சில்லு ட்ராக்டர்களைப் பெறுவதற்கு இயன்ற அளவு கூடிய விரைவில் எங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.

பிரவுண்ஸ் குரூப் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்,
பிரவுண்ஸ் குரூப் இன்டஸ்றியல் எஸ்டேட்,
அத்திடியா வீதி சமீபம், இரத்மலானை.
தொலைபேசி: 71—478


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org